பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 14 வெள்ளிக்கிழமை 28.04.2023 கதிர் 169

# ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

## நீதி அமைச்சர் விஜயதாஸ முன்வைத்தார்

கொழும்பு, ஏப்ரல் 28

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை முன்வைத்தார்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியபோது, பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதாக சபைக்கு அறிவித்தார்.

அதன்படி நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்திற்கு அறிவித்தார். ☞ 3



## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசியல் கட்சிகளிடமிருந்த வியாதிகள் எல்லாம் இப்போது தெற்கில் உள்ள அரசியல் கட்சிகளுக்கும் தொற்றிக் கொண்டுவிட்டன போன்றுள்ளது. தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் முன்னர் எல்லாம் கொழுத்திப்போடும் சரவெடியான, போராட்டம் வெடிக்கும் மக்கள் படை இறங்கும் வீதிக்கு இறங்குவோம் முழக்கங்களை எல்லாம் கொஞ்ச நாள்களுக்கு முன்னர் வரைக்கும் சஜித் பிரேமதாஸவும் அனுரகுமார திஸாநாயக்கவும் மேடைக்கு மேடை முழங்கி வந்தார்கள்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை ஆட்சியாளர்கள் நிறுத்த முயற்சித்தால், மக்களைத் திரட்டி வீதிக்கு இறங்குவோம், போராட்டம் வெடிக்கும், புரட்சி கிழிக்கும் என்றார்கள். ஒரேயொரு தடவை ஜேவிபி மட்டும் ஒரு பேரணி நடத்தியது. அதன் மீது பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய தடியடித் தாக்குதல் மற்றும் கண்ணீர்புகைக் குண்டுத் தாக்குதல்களை அடுத்துக் கலைந்து ஓடியவர்கள்தான் அதன் பின்னர் வீதிக்குத் திரும்பவேயில்லை.

அதுபோன்றே இந்தத் தலைவர்களுக்குத் தானும் சளைத்தவன் அல்லன் என்று கொண்டு வீறாப்பாகக் கிளம்பித் திரிந்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வசந்த முதலிகேயையும் காணவில்லை. ஆளே எங்கே இருக்கிறார் என்பதே தெரியவரவில்லை.

பனங்காட்டு நரி சல சலப்புகளுக்கெல்லாம் அஞ்சாது என்ற மாதிரி இவர்களின் முழக்கங்கள், வீராவேசப் பேச்சுக்கள், மிரட்டல்கள் எவற்றையும் ☞ 3

## தேசிய இணக்கப்பாட்டுக்கு சகலரும் ஒன்றிணையவும்

### ரணிலின் சகா வஜிர அழைப்பு



பிரதான எதிர்க்கட்சிகள் இனியும் தலைதூக்கும் நிலைமைவராது. எல்லோரும் ஒன்றிணைந்து தேசிய இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் - என்று ஐக்கிய தேசியக்கட்சியின்தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஆசியாவின்முன்னேற்றமடைந்த நாடாக இலங்கை மாற வேண்டும் என்றால் எல்லோரும் தேசிய இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள எம்.பிக்கள் பலர் இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசியுள்ளார்கள். என்னுடனும் பேசியுள்ளார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியை உடைத்து எடுப்பதல்ல இதன் நோக்கம். தேசிய இணக்கப்பாடுதான் எமது குறிக்கோள். - என்றார். (02)

## வல்லரசின் நிலைப்பாட்டால் சிக்கல் சம்பிக்க நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றை மையப்படுத்தி வல்லரசு நாடு தெரிவித்துள்ள விடயம் வெளிநாட்டுக்கடன் தொடர்பில் தீர்வைக் காணக் கடினமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடு மீது நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் கடன்களை நாம் மறுசீரமைப்புக்கு உட்படுத்துவதில்லை. அத்தகைய கடன்களை மறுசீரமைக்காது விட்டால் தமது நாட்டின் கடன்களை மறுசீரமைக்கப் போவதில்லை என்று வல்லரசு நாடொன்று கூறியுள்ளது. ஆகவே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணாது வெளிநாட்டக்கடன் தொடர்பில் தீர்வினைக் காண்பது கடினமாகும்.

அதேநேரம் உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதற்கு மூன்று வழிகள் உள்ளன. வட்டிவீதத்தினை மாற்றியமைத்தல், முதிர்ச்சியடையும் காலத்தினை மாற்றுதல், கடன்களை இரத்துச் செய்தல் ஆகிய விடயங்களை முன்னெடுக்க முடியும்.

ஆனால் தகுந்த முறையை முன்னெடுப்பது தொடர்பில் மக்களையும் நாடாளுமன்றத்தினையும் தெளிவுபடுத்த வேண்டும். இந்த விடயத்தினை மிகக் கவனமாக கையாள வேண்டும். இல்லாது விட்டால் கடந்த வருடம் எரிபொருளுக்காக உருவான வரிசை யுகம் மீண்டும் உருவாகலாம். அதுமட்டுமன்றி பணத்தினை ☞ 3

## விசாரணை ஆரம்பம்

பொலிஸார் காலவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகளை பயன்படுத்தினார்களா என்பது பற்றி அரச கணக்குகள் பற்றிய தெரிவுக்குழுவில் கேள்விகள் தொடுக்கப்பட்டு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் அரச கணக்குகள் பற்றிய தெரிவுக் குழுவானது, இராஜாங்க அமைச்ச லசந்த அழகிய வண்ண தலைமையில் கூடியது. பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரட்ன மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையாகியிருந்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி.ஹரனி அமரசூரிய அவர்களிடம் கேள்விகளைத் தொடுத்தார். அறிக்கைக்கு அமைவாக 12 ஆவது பக்கத்தில் பொலிஸ் ஆயுதக்களஞ்சியத்தில் உள்ள கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த தரவுகளுக்கு அமைவாக காலாவதியான கண்ணீர்ப் புகைக் குண்டுகள் இருப்பது உறுதியாகின்றது. ஆகவே பொலிஸார் காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகளை பயன்படுத்தினார்களா என்ற கேள்வி எழுகின்றது என்றார்.

அதற்குப் பதிலளித்த, பிரதிப்பொலிஸ்மா ☞ 3

## சவேந்திரவை இயக்கியது அமெ. விமல் மீண்டும் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அரசியல் நெருக்கடி தீவிரமடைந்த வேளையில் இராணுவ தளபதி சவேந்திர சில்வாவை அமெரிக்க தூதுவர் ஜூலிசங், சரத்பொன்சேகா ஆகிய இருவரும் வழிநடத்தினார்கள் என்று மீண்டும் தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, அரகலவில் பொன்சேகா ஒரு நடிகர் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடு மீதான இரண்டாம் நாள் விவாத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவரது உரையில் ☞ 3

### சர்வதேச நாணய நிதியத்துடனான

## ஒப்பந்தத்தில் எதையும் மறைக்காமல் அப்படியே வெளிப்படுத்த வேண்டும்!

### அரசிடம் அஜித் பெரேரா வலியுறுத்து



சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை செய்து கொண்ட ஒப்பந்தத்தில் எதையும் மறைக்காமல் அரசு அப்படியே நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் எம்.பியுமான அஜித் பீ. பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி கிடைத்ததும் சிலர் பட்டாசு சுட்டு மகிழ்ந்தார்கள். கஷ்டப்படும் மக்களுக்கு அப்படி உதவி கிடைத்தால் மகிழ்ச்சிதான். ஆனால், இதில் முக்கியமான ஒன்றைக் கவனிக்க வேண்டும். அதுதான் இந்தக் கடனைப் பெறுவதற்காகச் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசு செய்து கொண்ட ஒப்பந்தம். அதில் எதையும் மறைக்காமல் அரசு அப்படியே அந்த ஒப்பந்தத்தை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். இதை மக்கள் கட்டாயம் அறிய வேண்டும்.

அரசால் முகாமைத்துவம் செய்ய முடியாத அரச நிறுவனங்கள் கட்டாயம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால், பெற்றோலியம் நட்டத்தில் ஓடவில்லை. அப்படி இருக்கும் போது ஏன் புதிய பெற்றோல் செட்களை திறப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்?

போட்டி கூடும்போது விலை குறைந்தால் பரவாயில்லை. இங்கு விலை பற்றி எந்தப் பேச்சும் இல்லை. இதனால் எமது பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப் போகின்றது - என்றார். (02)

## நெடுந்தீவுக் கொலைகள்; ஆறாவது நபரும் இறப்பு

யாழ்ப்பாணம் நெடுந்தீவில் 5 பேர் கொடூரமாக, சரமாரியாக வெட்டிக்கொல்லப்பட்ட சம்பவத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த மூதாட்டியும் உயிரிழந்தார்.

100 வயது மூதாட்டியான கனகம் பூரணம் வியாழக் கிழமை மாலை உயிரிழந்தார். அவரது இருதயம் செயலிழந்ததனால் உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை ஒரே வீட்டில் வசிக்கும் 6 பேர் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் 3 பெண்களும் 2 ஆண்களும் உயிரிழந்தனர். ☞ 3

## சீன அலைவரிசை ஒலிபரப்பு நிறுத்தம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.28

இலங்கையில் பரீட்சார்த்தமாக காற்றலைகளில் ஒளிபரப்பான சீனத்தொலைக் காட்சி சேவை வியாழக் கிழமை முதல் திடீரென நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் எந்தவொரு அறிவிப்பும் இன்றி கடந்த 10 தினங்களாக காற் றலைகளில் ஒளிபரப்பாகிவந்த சீனத் தொலைக் காட்சியே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் ☞ 3

## மைத்திரி நழுவல்



சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள நீடித்த கடன் வசதி உடன்பாடு தொடர்பில் இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்ற வாக்கெடுப்பில் கலந்துகொள்ளப் போவதில்லையென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளது.

அக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் ☞ 3

## அரசர் மகிந்தரும் இளவலும் வாக்களிக்க வருவார்களா?

### மரிக்கார் எம்.பி. நாடாளுமன்றில் கிண்டல்



இளவரசர் நாமலும், அரசர் மஹிந்தவும் வாக்களிப்பதற்கு வருவார்களா என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு நெருக்கடியைச் சந்தித்தபோது, கோட்டாபாய ராஜபக்ஷவை சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லவத்கு விடாது தடுத்தவர்கள் தற்போது ஜனாதிபதி ரணிலுக்கு பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றார்கள்.

அன்று சர்வதேசத்திடம் செல்லாது எமது நாட்டுக்குள்ளேயே விடயங்களை செய்ய முடியும் என்று மார் தட்டினார்கள். சர்வ தேச நாணய நிதியத்தின் உடன்பாட்டுக்கு வாக்கெடுப்பு அவசியமில்லை. இதற்கு எவ்விதமான சட்ட ☞ 3

# இனப்பிரச்சினைக்கான தீர்வு ஊடாகவே பொருளாதாரத்திலும் முன்னகர முடியும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டு



சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பால் மாத்திரம் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் ஊடாகவே பொருளாதாரத்தில் முன்னோக்கிச் செல்லமுடியும். ஆகவே சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடு உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கும் எதிர்ப்பை வெளிப்படுத்துவோம் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடு மீது நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு என்ற ரீதியில் பெரும் பொருளாதார பாதிப்பை எதிர்கொண்டுள்ள பின்னணியில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் குறித்து விரிவான பேச்சு நடத்தப்படவேண்டும் என்பதை ஆரம்பத்தில் இருந்து வலியுறுத்தி வருகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தை கடுமையாக விமர்சித்தவர்கள் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தில் நாணய நிதியத்தை வரவேற்கிறார்கள்.

கடந்த செப்டெம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்ட ஊழியர் மட்ட ஒப்பந்த அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து, அது தொடர்பில் விவாதத்தை நடத்துமாறு பலமுறை வலியுறுத்தினோம்.

ஊழியர் மட்ட ஒப்பந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் முதல் தவணை நிதி தொகையைப் பெற்றுக்கொண்டவுடன் ஒப்பந்தம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்படுகிறது. நாணய நிதிய விவகாரத்தில் நாடாளுமன்றம் ஒருமித்து செயற்படுகிறது என்பதை ☞ 3

காலைக்கதிர்
Kalaikkathir

# மத்திய வங்கியின் ஆண்டறிக்கை வெளியீடு

கொழும்பு, ஏப். 28

நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த வருடத்தில் 7.8சதவீதமாக எதிர்மறை வெறுமானமாகபதிவானதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் 2022ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவினால் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

நிதியமைச்சில் நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, கையளிக்கப்பட்ட குறித்த அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையானது, நான்கு பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது. ஆண்டின் பொருளாதார விவகாரங்களின்நிலையை விளக்குகின்ற 08 அத்தியாயங்களையும், 30 புள்ளிவிபர அத்தியாயங்களையும் முதல் பகுதியில் உள்ளடங்குகின்றது. இரண்டாவது பகுதியானது, அரசாங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கொள்கை நடவடிக்கைகள் தொடர்பான வர்த்தமானி மற்றும் சுற்றறிக்கைகளின் தொகுப்பைக்கொண்டுள்ளது.

இந்த அறிக்கையின் மூன்றாம் பகுதி, இலங்கை மத்திய வங்கியின் திணைக்களங்கள் மற்றும் அவற்றுக்குரிய செயற்பாடுகளை விளக்குவதுடன், நான்காவது பகுதியில் அரசாங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கி தொடர்பான வங்கிக் கட்டமைப்பு தொடர்பான சட்டங்கள் மற்றும் கட்டளைகளின் பட்டியலை உள்ளடக்கியுள்ளது.

இந்நிலையில் குறித்த அறிக்கையில், இலங்கையின் பொருளாதாரத்திற்குதசாப்தகாலமாகபாதிப்பைஏற்படுத்தியுள்ள விடயங்களிற்கு தீர்வை காண்பதற்கான சீர்திருத்தங்களிற்கு ஆதரவு வழுங்கவேண்டியுள்ளது.

அத்துடன், நீண்டகாலமாக வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை எதிர்நோக்கியுள்ள இலங்கை, 2022ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களால் எழுந்த சவால்களையும் எதிர்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டது

இவ்வாறான பின்புலத்தில், வரிக் குறைப்பு, முன்னறிவித்தல் இன்றி சேதன விவசாயத்தை ஆரம்பித்தல், வெளிநாட்டு நாணய கையிருப்பு முடிவடையும் வரை வெளிநாட்டுக் கடனை செலுத்த முயற்சித்தமை, முன்னெச்சரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தாமைபோன்றகாரணங்கள் மூலம் பொருளாதாரத்தில் பாரிய அதிர்வுகள் ஏற்பட்டன.

இதனால் வெளிநாட்டு நாணய நெருக்கடி, சமூக பொருளாதார பிரச்சினையாகவும், சமூக அரசியல் பிரச்சினையாகவும் வலுவடைந்து,வர்த்தகங்கள்மீதான நம்பிக்கை சீர்குலைந்து, அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதன்மூலம்வாழ்க்கைச் செலவும் உற்பத்திச் செலவும் வெகுவாக அதிகரித்ததோடு, கடந்தவருடத்தில்எரிபொருள் விலை 185சதவீதத்தினாலும் பஸ் கட்டணம் 140 சத வீதத்தினாலும் நீர் கட்டணம் 120சதவீதத்தினாலும் மின்சார கட்டணம் 114சதவீதத்தினாலும் அதிகரித்தது.

உணவு வகைகளில் பாண் விலை 166சதவீதத்தினாலும் பால்மா 150சதவீதத்தினாலும் பழங்கள் 112சதவீதத்தினாலும் விலை அதிகரிப்பை வெளிப்படுத்தியதுடன், இதற்கு முன்னர் கண்டிராதவகையில்குறித்த ஆண்டிற்குள் விலைகள் உயர்வடைந்திருந்தது.

தனியார்துறைஊழியர்களின் கொள்வனவு சக்தி 22.7சதவீதத்தினாலும், அரச ஊழியர்களின்கொள்வனவு சக்தி 20.6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெருந்தோட்டத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 28

விவசாயத்துறையை நவீனமயப்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த ஆட்சி அர்பணிப்புடன்மேற்கொண்டு வருகின்றநிலையில்தோட்டப் பகுதி மக்கள் முகம்கொடுத்து வருகின்றபிரச்சினைகளுக்கு விரைவில்தீர்வுகளைவழங்க வேண்டியது அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெருந்தோட்ட மறுசீரமைப்பு குழுவுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, காணிப் பிரச்சினை உட்பட விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டதோடு, தற்போது தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்ற மகாவலி காணிப் பிரச்சினை குறித்தும் ஆராயப்பட்டது.

அதேபோல்பெருந்தோட்ட நிறுவனங்களில்செயற்பாடுகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது. எதிர்வரும் 10 - 15 வருடங்களுக்குள் பெருந் தோட்ட நிறுவனங்களில் குத்தகைக் காலம் நிறைவடைய உள்ள நிலையில் விவசாயத்துறையை நவீனமயப்படுத்திக்கொண்டு முன்னோக்கிச் செல்ல அரசாங்கம் முற்படுமாயின்பெருந்தோட்ட நிறுவனங்களுக்கான புதிய குத்தகை வசதிகளை பெற்றுக்கொடுக்கவேண்டியது அவசியமெனவும்ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அனைத்துநிறுவனங்களினதும் செயற்பாடுகளும் வரவேற்கத்தக்க வகையில் காணப்படவில்லைஎன்பதால் குத்தகைக் காலத்துக்கான புதிய அடித்தளம் ஒன்றை கட்டமைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பெருந்தோட்ட மறுசீரமைப்பு குழுவிற்கு பணிப்புரை விடுத்தார்.

பெருந்தோட்டநிறுவனங்களின் செயற்பாடுகளை மதிப்பிடுதல் மற்றும் புதிய குத்தகைகட்டமைப்பை உருவாக்குவதற்காக 2018 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பை புதுபிக்க வேண்டும். காணிகளை பெற்றுக்கொண்டதன்பின்னர் ஆட்சியின் அனுமதியின்றி தமது பங்குகளை விற்பனை செய்வதற்கு பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு இடமளிக்கக்கூடாது,

விவசாயம் மற்றும் விவசாய நவீனமயப்படுத்தலின் ஓர் அங்கமாக காணிகளில் மாணிக்க கல் அகழ்வு செயற்பாடுகளையும் இந்த ஆட்சி அறிமுகப்படுத்த உள்ளது என்றும் தெரிவித் தார். இதுதொடர்பில்பெருந்தோட்ட மறுசீரமைப்புச் சபை யின் கருத்துக்களும் கேட்டறியப்பட்டன.

பெருந்தோட்ட வீட்டுப் பிரச்சினை மற்றும் தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்தி சார்ந்த பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான வேலைத் திட்டம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டதோடு, காணி மீட்பு ஆணைக்குழுவின் பிரச்சினைகள் குறித்தும் அவதானம்செலுத்தப்பட்டது. அதேபோல் ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதியை அதிகரிப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

## நியூ டைமன் கப்பல் விவகாரம்:

# கொடஹேவா எம்.பி. மீது அமைச்சர் நேரடி விமர்சனம்

நியூ டைமன் கப்பல் பேரிடருக்கான இழப்பீட்டைப் பெறாதுஅனுப்பிவைக்கப்பட்ட விடயத்தினை வெளிப்படுத்தியதால் நாடாளுமன்ற உறுப்பினர் கொடஹேவா சாரைப் பாம்புக்கு மண்ணெண்ணெய் ஊற்றியது போன்றுகுழப்பத்தில்உள்ளார் என்று அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வதேசநாணய நிதியத்தின் உடன்பாடுமீதானஇரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ளுமன்ற உறுப்பினர் நாலக்ககொடஹேவாசட்டமா அதிபர்திணைக்களத்தின்மீது பழிபோடுவதற்கு முனைந்தார். அவருடைய உரையின் ஒட்டுமொத்த இலக்கும் அவ்வாறு தான் உள்ளது.

உண்மையில், அவர் சாரைப் பாம்புக்கு மண்ணெண்ணெய்யைஊற்றியது போன்று தான் குழப்பத்தில் உள்ளார். அவ்வாறு குழப்பமடையவேண்டியதில்லை. நியூ டைமன் கப்பலை இலங்கை கடற்பரப்புக்கு வெளியில் கொண்டு செல்வதற்கான உத்தரவினை ஜனாதிபதியே இட்டதாக சமுத்திரப் பாதுகாப்பு திணைக்களத்தின் தலைவர் கூறினார். அப்போது ஜனாதிபதியால் எவ்வாறு அந்த உத்தரவினை வழங்க முடியும் என்றே நான் கேள்வி எழுப்பினேன். அப்போதுஅவர் மின்னஞ்சல் உத்தரவினை வெளிப்படுத்தினார். அந்த மின்னஞ்சலை ஜயநாத் கொலம்பகே தான் அனுப்பி இருந்தார். அப்போது அவர் வெளிவிகார அமைச்சின் செயலாளராக இருந்தார்.

குறித்த மின்னஞ்சலின் பிரதிகள் கடற்படைத் தளபதிக்கும், மீபாவின்தலைவருக்கும் அனுப்பப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ஒருபோதும் வெளிவிவகார செயலாளர் ஊடாக இராணுவத்தளபதிக்கோ கடற்படைத்தளபதிக்கோ உத்தரவிடவில்லை. இராணுவத்தில் இவ்விதமாக இடம்பெறுவதில்லை.இதனால் தான் விடயத்தின் உண்மையை ஆராயுமாறு ஜனாதிபதியிடத்தில் கோரினேன். குறிப்பாககடற்படைக்குஜனாதிபதி உத்தரவினை வழங்குவதாக இருந்தால் அதனை பாதுகாப்புச் செயலாளர் ஊடாகவே வழங்க வேண்டும். அதனை வெளிவிவகார அமைச்சின்செயலாளர்ஊடாக வழங்க முடியாது.

அதேநேரம், கப்பலால் ஏற்பட்ட அனர்த்திற்கான இழப்பீட்டைபெற்றுக்கொண்டு அதன் பின்னர் கப்பலை அனுப்புவதற்கான அதிகாரம், பொறுப்பு அனைத்தும் உங்களுக்கே (நாலக்க கொடஹேவா) இருந்தது. அந்தப் பொறுப்பினைச் செய்திருக்க வேண்டும். அதேநேரம், இழப்பீட்டினைப் பெறும் வரையில் கப்பலைச் செல்வதற்கு அனுமதி அளிக்க வேண்டாம்என்றுமுன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா உத்தரவு இட்டிருந்தார். அவ்வாறிருந்தும் கப்பல் விடுவிக்கப்பட்டுள்ளது. இழப்பீடு பெறப்பட்டிருக்கவில்லை என்றார்.

# டயானாவும் விமர்சனம்

கப்பல் அனர்த்தம் நிகழ்ந்த போது இழப்பீட்டைப் பெறும் விடயத்திற்கு பொறுப்பாக இருந்த இராஜாங்க அமைச்சரான நாலகொடஹேவாதற்போது குழந்தைப் பிள்ளைபோன்று பேசிக் கொண்டிருக்கின்றார் என்று இராஜங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்துள்ளார்.

நடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வதேசநாணயநிதியத்தின்உடன்பாடு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கடற்பரப்பில் நடைபெற்ற பேரிடரிற்கு இழப் பீடு பெறாது கப்பலை அனுப்பியமைக்கு நாலக்க கொடஹேவாதான் காரணமாக இருந்துள்ளார். இப்பொழுது குழந்தைப்பிள்ளை தன மாகத் தான் பேசிக்கொண்டிருக்கின்றார்.

கிறிஸ் கொடுக்கல் வாங்கலின்போது 50 மில்லியன் பெற்றுவிட்டு நாமல் ராஜபக்ஷவின் பெயரைச் சிக்கச் செய்தவராகவும் உள் ளார்.

இங்கிலாந்தில் கொடஹேவாவுக்கு உதவியர்கள் உள்ளார்கள். அவர்களில் ஒருவர் தான் சாமர. ஆகவே, பொறுப்புக்கூற வேண்டிய நிலையில்இருந்துதவறிவிட்டு தற்போது குழந்தைப் பிள்ளைபோன்று எதுவுமே தெரியாதவாறு இருப்பது வேடிக்கையானது - என்றார்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் லஞ்ச விவகாரத்தில் சட்டமா அதிபர் திணைக்களமும் இழுப்பு

எம்.வி.எக்ஸ்பிரஸ்பேர்ள் கப்பல்விவகாரத்தில்சட்டமாதிபர்திணைக்களத்துடன்தொடர்புடைய நபரே இலஞ்சம் பெற்றிருக்க வேண்டும். நியூ டைமன் கப்பல் விவகாரத்தில் என்னை தொடர்புப்படுத்தி நீதியமைச்சர் குறிப்பிட்ட விடயங்கள் அடிப்படையற்றது என்று சுதந்திர மக்கள் சபை உறுப்பினரும்நாடாளுமன்ற உறுப்பினருமான நாலக்க கொடஹேவா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமைசிறப்புரிமை மீறல் பிரச்சினையை எழுப்பி உரையாற்றும்போது மேற்கண்டவாறுதெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது நாட்டின் கடற்பரப்பில் 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தீ விபத்துக்கு உள்ளான நியூ டைமன் கப்பல் விவகாரத்தில் என்னை தொடர்புப்படுத்திநீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் குறிப்பிட்ட விடயங்கள் அடிப்படையற்றவை. நியூ டைமன் கப்பலை நாட்டின் கடற்பரப்பில் இருந்து வெளியேற்றுமாறு வெளிவிகாரத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜயநாத் கொலம்பகே கடற்படைதளபதிக்கு அறிவித்துள்ளதாக நீதியமைச்சர் சபையில் குறிப்பிட்டார். நீதியமைச்சரின் முறையற்ற கருத்தால் சமூக வலைத்தளங்களில் எனக்கு எதிரான கருத்துக்கள் பதிவேற்றம்செய்யப்படுகிறது.

நியூ டைமன் கப்பல் தொடர்பில் அமைச்சர் விஜயதாச கூறிய விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டபயராஜபக்விடம்நான் தொலைபேசியில்உரையாடிய போது அவர் 'பைத்தியமா, முழுமையான மதிப்பீட்டை மேற்கொள்ளாமல் கப்பலை வெளியேற்றவேண்டாம்என்ற நிலைப்பாட்டில் நீங்களும் இருந்தீர்கள். சட்டமாதிபரின் ஆலோசனைக்கு அமைய செயற்படுவது அவசியமானது என்று குறிப்பிட்டீர்கள்' என்று குறிப்பிட்டார்.

மறுபுறம்முன்னாள்வெளிவிகாரத்துறை அமைச்சர் ஜயநாத் கொலம்பகேவிடம் தொலைபேசியில் உரையாடியபோது அவர் 'இந்த விடயத்தில் நீதியமைச்சர் உங்களை ஏன் தொடர்புப்படுத்தினார் என்பதை நான் அறியவில்லை. நியூ டைமன் கப்பலைநாட்டின்கடற்பரப்பில் இருந்து வெளி யேற்றுமாறு ஜனாதிபதி குறிப்பிட்டதாக நானே கடற்படை தளபதிக்கு அறிவித்தேன் - என்றார்.

அத்துடன், நியூ டைமன்கப்பலில்இரண்டரை இலட் சத்துக்கும் அதிகமான எண்ணெய் சேமிக்கப்பட்டிருந்தது. துரதிஷ்டவசமாக கப்பலில் ஏற்பட்ட தீ தீவிரமாக பரவி கப்பல் கடலில் மூழ்கினால்அதுபாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் கப்பலை நாட்டின் கடற்பரப்பில் இருந்து வெளியேற்றுமாறு அறிவித்ததாக அவர் குறிப்பிட்டார்.

நியூ டைமன் கப்பலை நாட்டின்கடற்பரப்பில்இருந்து வெளியேற்றுமாறு யார் உத்தரவு பிறப்பித்தது என்பது தற்போது தெளிவாகி விட்டது. ஆகவே இவ்விடயத்தில் என்னை தொடர்புப்படுத்தி கருத்துரைப்பதை நீதியமைச்சர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் இலங்கை பிரஜை 250 மில்லியன் டொலர் இலஞ்சம் பெற்றுக்கொண்டுள்ளதாக நீதியமைச்சர் குறிப்பிடுகிறார். வழக்கு தாக்கல் நடவடிக்கைகளை சட்டமாதிபர் திணைக்களமே மேற்கொண்டது, அவ்வாறாயின் சட்டமாதிபர் திணைக்களத்துடன் தொடர்புடைய நபரே இலஞ்சம் பெற்றிருக்க வேண்டும். இலஞ்சம் பெற்றுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. ஆனால் சாட்சியம் இல்லைஎன்றுகுறிப்பிடுவதை ஏற்றுக்கொள்வதற்குநாங்கள் அறிவில்லாதவர்கள் அல்லர்

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவை பிணைமுறி மோசடியாளர், ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுக்கு பொறுப்பு தாரி என்று கடுமையாக விமர்சித்தவர்கள் இன்று அவரை புகழ்பாடுகிறார்கள். நாட்டின் நிதியை நான் மோசடி செய்யவில்லை. அதனால் அரசாங்கத்தின் குறைப்பாடுகளை தற் துணிவுடன் சுட்டிக்காட்டு வேன். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக ஆட்சியாளருக்கு புகழ்பாட வேண்டிய தேவை கிடையாது என்றார்.

# முன்னாள் கிரிக்கெட் நடுவர் வீடொன்றில் சடலமாக மீட்பு!

வாத்துவ, மகாவிஹார வீதியிலுள்ள வீடொன்றில் இருந்துமுன்னாள்பாடசாலை கிரிக்கெட் நடுவர் ஒருவர் சிதைவடைந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று வாத் துவ பொலிஸார் தெரிவித்தனர்.

வாத்துவ, மகாவிஹார வீதியில் உள்ள வாடகை வீட்டில்தனியாகவசித்துவந்த சாந்தசித்ரல்சல்காடுஎன்ற73 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

வீட்டினுள் இருந்து கடும் துர்நாற்றம் வீசுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், குறித்த நபர் வீட்டின் அறையொன்றில் உள்ள கட்டிலில் சடலமாகக் கிடப்பதைக் கண்டுபிடித்தனர்.

பாணந்துறை குற்றத் தடுப்புப் பிரிவு சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலிஸாரால் மரண விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், அவர் மூன்று நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

சடலம் பிரேத பரிசோதனைக்காகப் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (02)

# உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பில் ரணில் மீது குற்றச்சாட்டு இல்லை

## நிமல் லன்ஷா தெரிவிப்பு

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புத் தொடர்பில்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க மீது எவ்விதமான குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படவில்லை, அதுமட்டுமன்றி குற்றஞ்சாட்டப்பட்ட எவரும் அமைச்சரவையிலும் இல்லை என்று நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகசெயற்படுவதாக அறிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஷா தெரிவித்தார்.

வியாழக்கிழமை நாடாளுமன்ற சிறப்புரிமை பிரச்சினைஎழுப்பிஉரையாற்றிய நாலக கொடஹேவா ஏப்ரல் 21குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்கு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கபொறுப்புக்கூற வேண்டும் என்று குறிப்பிட்டவர்கள் தற்போது அவருக்குபுகழ்பாடுகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் லன்ஷா அதற்குப் பதிலளித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூற வேண்டும் என்று குறிப்பிட்டவர்கள் இன்று அவருக்கு சார்பாக செயற்படுகிறார்கள், மனசாட்சிக்கு எதிராக செயற்பட முடியாது என்பதால் எதிர்க்கட்சி பக்கம் செயற்படுகிறார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாலக்க கொட ஹேவா குறிப்பிடுவது அடிப்படையற்றது.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் ஏதும் முன்வைக்கப்படவில்லை. அத்துடன் குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன்தொடர்புடையதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எவரும் அமைச்சரவையில் அங்கம் வகிக்கவில்லை.

நாலக்க கொடஹேவா தான் முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக் வுக்கு தவறான ஆலோசனை வழங்கினார். கடலையும், கடல் வளங்களையும் கொள்ளையடித்தார். அத்துடன் கப்பல் விபத்தை தோற்றுவித்து மீனவர்களின் வாழ்க்கையையும் நெருக்கடிக்குள் தள்ளினார். இப்போது தப்பித்துக்கொள்வதற்கு கதைகளைக் கூறுகின்றார் - என்றார்.

# இ.தொ.கா ஆதரவு

சர்வதேசநாணயநிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதிக்கான உடன்பாட்டுக்கு எமது கட்சி ஆதரவாக வாக்களிக்கும் என்றுஇலங்கைதொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திஅமைச்சில்வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகசந்திப்பின்போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீள்வதற்குசர்வதேசநாணய நிதியத்தின் உதவி அவசியம் என்றுஇலங்கைதொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்தது. அந்த வகையில் ஜனம்ளப் அமுல் படுத்துவதற்கான தீர்மானம் மீது நாடாளுமன்றத்தில் நாளை(இன்று) வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

ஆட்சியில் பங்காளிக் கட்சி என்ற வகையில் அதற்கு ஆதரவு வழங்கப்படும். சர்வதேசநாணயநிதியத்தின்கடன் குறித்துசிலர்விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.ஆனால், சர்வதேச நாணய நிதியத்தினுடைய அங்கீகாரம் கிடைத்ததால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள, ஏற்படப்போகும் நன்மைகள் பற்றி எவரும் கதைப்பதில்லை.

எது, எப்படி இருந்தாலும், நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி முன்னெடுக்கும் பொருளாதார திட்டங்களுக்கு நிச்சயம் ஒத்துழைப்பு வழங்கப்படும். அதேபோலபிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் இதற்கு ஆதரவு வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எதிரணியில் உள்ள ஏனைய கட்சிகளும் ஆதரவு வழங்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கணக்கிலேயே எடுக்காமல் ரணில் தன்பாட்டில் தான் நினைத்தவற்றையெல்லாம் செய்துகொண்டிருக்கிறார். அதற்கெதிராக இந்தத் தலைவர்களால் ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போட முடியவில்லை. இனி என்ன செய்தாலும் ரணிலிடமிருந்து காரியம் சாதிக்க முடியாது - கோட்டாபய மாதிரி ஒடி ஒளியிறஆள்இல்லைரணில். நின்றுதிருப்பியடிக்கிற ஆள் - என்று புரிந்துபோனதாலோ என்னவோ, தேர்தல் காலங்களில்பேசியதுநாறவாய், இது வேற வாய் என்று பதுங்கிக் கொண்டார்கள் எதிர்க் கட்சித் தலைவர்கள்.

அதைப்பார்க்கும்போது தான் எனக்குச் சில சமயங்களில் மனதை அரிக்கும். எல்லாத் தலைவர்களுமே இப்படி இருக்கும்போது நாம் மாவையாரை மட்டும் இந்த வீராவேசப்பேச்சுகளுக்காகப் பலதடவைகள் கண்டபடிக்கு விமர்சித்திருக்கிறோமே என்று. என்ன செய்வது மக்களை முட்டாள்கள் என்று நினைத்து இப்படி வாய்க்கு வந்தபடி மேடையைக் கண்டால் வீராவேசமாகப் பேசுவது தேசிய வியாதிபோல் இருக்கிறது.

இது போதாது என்று தமிழ்க்கட்சிகளைப்போன்றே இப்போது தெற்கிலும் எதிர்க் கட்சிகள் எல்லாம் ஒற்றுமை ஒற்றுமை என்று பிதற்றத் தொடங்கியிருக்கிறார்கள். எதிரணியில் உள்ள எல்லோரும் ஒன்றிணைந்து எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசதலைமையில்"என்ன கிழிக்க முடியும்" என்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இரு தடவைகள் கூடி ஆராய்ந்திருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தில் ஜேவிபி கலந்துகொள்ளவில்லை. அதையும் உள்வாங்கு-வதற்குமுயன்றுகொண்டிருக்கிறார்கள். அது நடக்குமோ தெரியவில்லை.

இந்த"ஒற்றுமைக்கூட்டத்தின்" முதலாவது அமர்வில் அழைப்பு விடுக்கப்பட்ட போதும் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. வழக்கு ஒன்று இருந்ததால் தன்னால் பங்குபற்ற முடியவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் மட்டும் விளக்கம் கொடுத்திருந்தார். மற்றவர்கள் எதுவும் சொல்லவில்லை. கூட்டமைப்புக் கூட்டத்துக்குப்போய்சம்பந்தர் பேசினாலே சும்மாதானே இருக்கிறாங்கள். இதில சஜித்தின் கூட்டத்துக்குப் போய்என்னசெய்வது என்று நினைத்தாங்களோஎன்னவோ ஒருவரும் போகவில்லை. ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போயிருந்தார்.

இந்த வாரம் நடந்த இரண்டாவது சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன்சுமந்திரனும் கலந்துகொண்டிருந்தார். இன்றைய ஆட்சியின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக எப்படிக் கூடிச் செயற்படுவது என்று இந்தக் கூட்டத்தில் ஆராயப் பட்டிருக்கிறது. எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இனியும் கூடிக் கூடி ஆராய்வது என்று மட்டும் முடிவு செய்திருக்கிறார்கள். ஆனாலும் எதிர் கட்சிகள் எல்லாம் ஒற்றுமையுடன் செயற்பட்டால்தான் காரியத்தைச் சாதிக்கமுடியும்என்றுமட்டும் திரும்பத்திரும்பஎல்லோரும் சொல்லிக்கொண்டார்கள்.

அதைக் கேட்டஎனக்குச் சிரிப்பு வராத குறை. தமிழ் அரசையும் முன்னணியையும் அதுவும் கஜேந்திரகுமாரையும் சுமந்திரனையும் ஒரேயிடத்தில்வச்சுக்கொண்டு ஒற்றுமையைப் பற்றிப் பேசி என்ன பயன்? பாவம் சஜித்தம்டலஸூம். தமிழ்க்கட்சிகளின்ஒற்றுமைச்சீத்துவம் தெரியாமல் அவற்றையும் சேர்த்துக்கொண்டு ஒற்றுமைப்பட்டுஆட்சியாளர்களை எதிர்க்கப்போவதாகக் கனவு காண்கிறார்கள்.

- இடிமின்னல் -

## ஊழல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குறித்த சட்டமூலத்தில், ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சபை சமவாயத்தின் குறித்த சில ஏற்பாடுகளுக்கும் மற்றும் வேறு சர்வதேச நீதியில் ஏற்று அங்கீகரிக்கப்பட நெறிகள், நியமங்கள் அத்துடன் மிகச்சிறந்த செயல் முறைகள் என்பவற்றுக்கும் பயன்கொடுப்பதற்கும்,

இலஞ்சம் ஊழல் பற்றிய சார்த்துதல்களை மற்றும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தலுடன் தொடர்புபட்ட தவறுகளை மற்றும் இணைந்த தவறுகளைக் கண்டுபிடித்து புலனாய்வுச் செய்வதற்கும்,

இலஞ்சம், ஊழல் பற்றிய தவறுகளுக்காகவும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும்வெளிப்படுத்தலுடன் தொடர்புபட்ட தவறுகளுக்காகவும்மற்றும்வேறு இணைந்த தவறுகளுக்காகவும் குற்ற வழக்குகள் தொடுக்கப்படுவதனை உறுதிப்படுத்தவும் அவற்றைத் தொடுப்பதற்கும்,

சுயாதீனமான ஆணைக் குழுவொன்றைத் தாபிப் பதற்காக ஏற்பாடு செய்வதற்கும், ஊழல் பழங்கங்களைத் தடுப்பதனை ஊக்குவிப்பதற்கும் முன்னெடுத்துச் செல்வதற்கும்,

ஊழலைஒழிப்பதற்கு பொதுமக்களுக்கு அறிவு புகட்டுவதற்கும் அவர்களிடையே விழிப்புணர்ச்சியை எழுப்புவதற்கும்,

இலஞ்ச சட்டம், 1994 ஆம்ஆண்டின்19ஆம்இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுசட்டம்மற்றும் 1975ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டம் என்பவற்றை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டமூலமாகும் - என்று குறிப்பிட்டார்.

## வல்லரசின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பெற்றுக்கொள்ளும் வங்கிகளின் தானியங்கி இயந்திரங்களின் முன்னாலும் வரிசைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. அதனால் நெருக்கடிகள் அதிகரிக்கலாம் - என்றார்.

## விசாரணை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிபர் சட்டத்தரணி ருவன் குணசேகர, களஞ் சியசாலையில் உள்ள பொருட்களின்பட்டியலுக்குஅமைவாக, கண்ணீர்ப்புகைக்குண்டுகள் குறிப்பிடத்தக்க அளவில் காலாவதியாகியுள்ளது. அந்தத் தரவுகள் சரியானவை. ஆனால் அவ்வாறு காலாவதியாகிய கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பொலிஸ் ஆயுத மத்திய களஞ்சியசாலையில் தான்உள்ளன. இதற்கு அமைவாக காலாவதியானவற்றை அழிப்பதற்கு அடுத்தமாதம் நடவடிக்கைகளைஎடுப்போம்.

நாரஹேன்பிட்டிய மற்றும் வாழைத்தோட்டம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகள் இருப்பதாக கூறப்படுவது சரியானது. அவை 2012ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டவை. ஐந்துவருடங்களேஅவற்றைப் பயன்படுத்தமுடியும். ஆனால் பயன்படுத்தப்படவில்லை. காலாவதியாகிவிட்டன. இவ்வாறு காலாவதியாகிய வற்றை நாம் பொலிஸ் மத்திய ஆயுத களஞ்சியத்திற்கு அனுப்பிவிட்டோம். அவ்வாறு காலாவதியாகிவற்றை பொலிஸ் நிலையங்களில் வைக்க முடியாது. அதனால் காலாவதியானவை பயன்படுத்தப்பட மாட்டாது. இறுதியாக 2020ஆண்டு கொண்டுவரப்பட்டவையே தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன - என்றார்.

மீண்டும் வினாவைத் தொடுத்த தேசிய மக்கள் சக்தியின்நாடாளுமன்றஉறுப்பினர் கலாநிதி.ஹரனி அமரசூரிய, அடிக்கடி கண்ணீர்ப்புகைக் குண்டுகள்கொள்வனவுசெய்யப்படுகின்றனவா? அதற்கான காரணம்என்ன? தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்யப்படுகின்றனவா? அவ்வாறு கொள்வனவுசெய்யப்படும் குண்டுகள் சர்வதேச நடைமுறைகளுக்கு அமைவாகக் கையாளப்படுகின்றனவா?என்றார்.

அதற்கு பதிலளித்த, பிரதிபொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி ருவன் குணசேகர, குற்றவியல் ஏற்பாடுகளில் அதற்கான ஏற்பாடுகள் உள்ளன. அதனைவிடவும் பொலிஸ் கட்டளைச் சட்டங்களிலும் ஏற்பாடுகள்உள்ளன.இவற்றுக்கு அப்பால் உரிய வழிகாட்டல்களைஉருவாக்கத் தருமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடத்தில் பொலிஸ்மாஅதிபர்கோரிக்கை விடுத்துள்ளார் அது இன்னமும் கிடைக்கவில்லை. அவ்வாறானநிலையில்சட்டமா அதிபர்அவ்வப்போதுவழங்கும் ஆலோசனைகளுக்கு அமைவாகவே கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பயன்படுத்துகின்றோம் என்றார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கமல் சில்வா கூறுகையில், கண்ணீர்ப்புகை காலாவதியாகின்றபோது அவற்றின் வீரியம்குறைவடைந்துவிடும். இதனால்தான் பலர் கையில் வைத்திருப்பதையும் கண்டோம். நாம் பல்கலைக்கழகத்தில் இருந்தால் கண்ணீர்ப்புகையால் என்ன நடக்கும் என்பதை அறிந்திருப்போம் என்றார்.

அப்போது.குறுக்கீடுசெய்த இராஜாங்கஅமைச்சர்.டயானா கமகே அவ்வாறானால் நீங்கள் காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகளை பயன்படுத்தினீர்கள் தானே - என்றார்.

இல்லை இல்லை. காலாவதியானவற்றைப் பயன்படுத்தவில்லை. காலாவதியாகியிருந்தால் கூடப் பிரச்சினையும் இல்லை என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கமல் சில்வாகூறினார்.

பின்னர், பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ எம்.பி. ரி.பி.ரத்நாயக்க, உங்களிட மிருந்து கிடைத்த தகவல்களுக்கு அமைவாகவே, இந்த அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. காலாவதியாகு-வதனால்பிரச்சினை இல்லை என்றுநீங்கள் கூறும் விடயம் ஏற்புடையதல்ல. காலாவதியாகுவதனால் ஏற்படுகின்ற இரசாயண மாற்றங்களால் ஏற்படும்விளைவுகள்பாரதூரமானவை என்றார்.

## சவேந்திரவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேலும் தெரிவித்ததாவது: காலிமுகத்திடல்போராட்டகளம்இராச்சியத்தைவீழ்த்தும் அரசியல் சூழ்ச்சியின் இருப்பிடம் 2022ஆம் ஆண்டு மே ஒன்பது, ஜூன் ஒன்பது மற்றும் ஜூலை ஒன்பது ஆகிய திகதிகளில் நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் ஜனநாயகத்துக்குஎதிரானது. இந்த சம்பவங்களின் பின்னணியை நான் நூலாக வெளியிட்டுள்ளேன்.

ஜனநாயக போராட்டம் என்று குறிப்பிட்டுக் கொண்டு நாட்டை லிபியாவாக மாற்ற முன்னெடுக்கப்பட்ட திட்டத்தை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தியுள்ளேன். உண்மை வெளிப்பட்டுள்ளதால் ஒருதரப்பினர் தற்போது கலக்கமடைந்துள்ளார்கள். இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் டுவிட்டர் பதிவில் நாம் வெளியிட்ட விடயங்களை புறக்கணித்துள்ளார்.

காலி முகத்திடல் போராட்டக்களத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தாக்கப்பட்டார். போராட்டக்களத்தில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு நடிகராக இருந்தார். கடந்த ஆண்டு நாட்டில் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்த போது இராணுவ தளபதிசவேந்திர சில்வாவை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்ஜூலிசங்பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகா ஆகியோரே வழிநடத்தினார்கள்.

இந்த விடயம் உறுதியானது. இந்தக்கருத்துக்களை நான் நாடாளுமன்றத்தில் மீண்டும் உறுதியாகத் தெரிவித்துள்ளேன். எமது இறைமையை உறுதி செய்ய வேண்டிய கட்டாயம் இந்தநாட்டின்அனைத்து மக்களுக்கும் உள்ளது - என்றார்.

## அரசர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அங்கீகாரமும் இல்லை. ஜனாதிபதி செயலகத்தின் சமலறையில் உள்ளவர் தயாரித்த ஆவணம்தான் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அது ஜனாதிபதியையும் சிக்கலுக்குள்உள்ளாக்கும்வகையில்தான் உள்ளது. அதற்கு இளவரசர் நாமலும், அரசர் மஹிந்தவும் வாக்களிக்க வருவார்களா? என்று ஆளும் தரப்பினர்தான்கூறவேண்டும் - என்றார்.

## நெடுந்தீவுக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பூரணம் மட்டும் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இவர்கள் அனைவரையும் கொலை செய்தார் எனச் சந்தேகிக்கப்படும் நபரைப் பொலிஸார் கைது செய்தனர். அவரிடமிருந்து 26 பவுண் நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

## நெடுந்தீவுக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காற்றலைகளில் சீன அலைவரிசை ஒன்று இலவசமாகத் தனது பரீட்சார்த்த ஒளிபரப்பு சேவையை ஆரம்பித்திருந்தது.

சைனீஸ் குளோபல் ரெலிவிசன் நெற்வேர்க் அலைவரிசை இதுவரை கேபிள் இணைப்புக்கள் மூலம் வழங்கப்பட்டு வந்த நிலையில், கடந்த 10 நாட்களாக காற்றலைகள் மூலம் பரீட்சார்த்தமாக ஒலிபரப்பை மேற்கொண்டு வந்தது.

எந்த அடிப்படையில் இந்த ஒலிபரப்பு மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்புஎதுவும் விடுக்கப்பட்டிருக்கவில்லை.

## மைத்திரி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: எனக்கு அத்தியாவசிய தேவையொன்றின் காரணமாக கொழும்பை விட்டு வெளியேற நேர்ந்துள்ளது. அதனால் நாளை (இன்று) நடைபெறும் வாக்கெடுப்பில் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை.

அத்துடன், தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் சர்வதேசநாணய நிதியத்தில் கடன்பெறுவதில்தவறில்லை. சர்வதேசநாணயநிதியத்துடன் கலந்தாலோசித்து அதன் நிபந்தனைகளை எளிமையாக்க வேண்டும் அல்லது நீக்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

##

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிரதான கடன் வழங்குநர்களுக்கு காண்பிப்பதற்காகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது என்பதை ஊகிக்க முடிகிறது.

தற்போதைய பொருளாதாரப்புதுகுறியகாலத்தை மாத்திரம் வரையறுத்ததல்ல. நாட்டில் இனப்பிரச்சினை தோற்றம்பெற்றதைதொடர்ந்து பொருளாதார பாதிப்புதீவிரமடைந்தது. தமிழ் மக்களை அழிப்பதற்காக மொத்த தேசிய வருமானமும், வெளிநாட்டு அரச முறை கடன்களும் முழுமையாக பயன்படுத்தப்பட்டன. போர்ச் சூழல் தமிழர்களை மாத்திரமல்ல பொருளாதாரத்தையும் அழித்தது. அதற்கு சிங்கள பெரும்பான்மை ஆட்சிகள் தலைமைத்துவம் வழங்கின.

பொருளாதார பாதிப்புக்கு சர்வதேச நாணய நிதியம் என்பது குறுகிய காலத் தீர்வாகும். அது நிலையானதன்மையை உருவாக்காது. இலங்கைபுதியபரிமாணத்தை நோக்கி பயணிக்க வேண்டுமாயின் நாட்டில் புரையோடிப்போயுள்ளஇனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு ஆரம்பிக்கப்பட்ட சூழலில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண சர்வகட்சி கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் பெறுபேறு எவ்வாறு அமையும் என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டோம். அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை குறுகிய காலத்துக்குள் நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் குறிப்பிட்டார். அது வழமையான வாக்குறுதியாகவே அமைந்தது.

30 வருடகால போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் அரச நிறுவனங்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகிறது. தொல்பொருள் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்கள் தமிழர்களுக்கு எதிராகவே செயற்படுகின்றன.

தமிழரின் புராதன சின்னங்கள் மற்றும் உரிமைகள் அழிக்கப்படுகின்றன அதற்கு நீதிமன்றம் தடைவிதிக்கும் போது அதனை ஒரு தரப்பினர் மதிக்காமல் தன்னிச்சையாக செயற்படுகிறார்கள். அதற்கு பொலிஸாரும் ஆதரவாக செயற்படுகிறார்கள். தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் - என்றார்.




# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 06, ஆனந்தன்வடலி வீதி, 330/1ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் K.நவரட்ணம் பெண் நாகம்மா என்ற பெயரில் யாழ் மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது. இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் கனகசபை நவரத்தினமும் பெண் நாகம்மாவும் 09.04.1962ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கந்தையா தில்லையம்பலம் முகதாவில் 1914ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் முத்தையா சோதிலிங்கம் பெண் நல்லைநாயகி என்பவரிற்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

பின்னர் குறித்த ஆதனத்தை முத்தையா சோதிலிங்கமும் பெண் நல்லைநாயகியும் 13.10.1972 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கிருஷ்ணபிள்ளை துரசிங்கம் முகதாவில் 21386ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செல்லையா லிங்கசாமி பெண் சரஸ்வதி என்பவரிற்கு அறுதியாக விற்றுள்ளனர். அதன்பின் குறித்த ஆதனத்தை செல்லையா லிங்கசாமியும் பெண் சரஸ்வதியும் 09.10.1976ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இராமலிங்கம் இராசா முகதாவில் 1991ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் முத்தையா சோதிலிங்கம் பெண் நல்லநாயகி என்பவரிற்கு அறுதியாக விற்றுள்ளனர்.

பின்னர் குறித்த ஆதனத்தை முத்தையா சோதிலிங்கம் 29.05.2019ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மு.சே.இராசையா முகதாவில் 9270 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் தனபாலசிங்கம் பெண் கலாஜோதி என்பவரிற்கு நன்கொடை வழங்கியுள்ளார்.

அதன்பின் குறித்த ஆதனத்தை பொன்னையா தனபாலசிங்கமும் பெண் கலாஜோதியும் 12.02.2022ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மு.சே.இராசையா முகதாவில் 10170ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஜயரஞ்சன் விஜயரூபன் என்பவரிற்கு நன்கொடை வழங்கியுள்ளார்.

எனினும் 10170 ஆம் இலக்க நன்கொடை உறுதியின் ஆதன அட்டவணையில் யாழ் மாநகர சபை என்பதற்குப் பதிலாக நல்லூர் பிரதேசசபை என தவறுதலாக உள்ளமையால், 15576ம் இலக்க வெளிப்படுத்தலும் உறுதிப்படுத்தலும் உறுதியால் உள்ளூராட்சி சபை: "யாழ் மாநகரசபை" என யாழ்ப்பாணம், அரியாலை. A.V.றோட் எனும் முகவரியைச் சேர்ந்த விஜயரஞ்சன் விஜயரூபன் வெளிப்படுத்தி உறுதிப்படுத்தியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், சுண்டிக்குளிக் கோவிற்பற்று, யாழ்ப்பாணம் மாநகர சபை, நல்லூர் பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு - J/94. சிவியாதெரு இறை: சிதம்பரன் புலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு (1.3/4) ஒன்றே முக்காலும், கிணறும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும். இதன் எல்லை:-

கிழக்கு : செல்லையா முத்துச்சாமிக்கும் பெண் சின்னம்மாவுக்குமுரிய ஆதனம்;
வடக்கு : செல்லையா முத்துச்சாமிக்கும் பெண் சின்னம்மாவுக்குமுரிய பிரத்தியேக கையொழுங்கை;
மேற்கு : இதன் மீதியாதனமும் மேற்குப் பக்க றோட்டிலிருந்து இவ்வாதனத்துக்கும்
இதன் மேற்கெல்லை மீதியாதனத்துக்கும் போக்குவரத்து செய்யவுள்ள கையொழுங்கை முகப்பும்;
தெற்கு: பொன்னையா காசிப்பிள்ளைக்கும் பெண் சின்னம்மாவுக்குமுரிய ஆதனம்.

இதடங்கலும்.

தற்போது விஜயரஞ்சன் விஜயரூபன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை ஒரு மாதத்திற்குள் பிரசுரித்த திகதியிலிருந்து பத்திரிகையில் கோருபவர் யாரா வது இருப்பின் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது விஜயரஞ்சன் விஜயரூபன் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## குற்றச்சாட்டுடன் நின்றுவிடாது நடவடிக்கை எடுப்பது அவசியம்

**இலங்கைக் கடற்பரப்பில் அடுத்தடுத்து நிகழ்ந்த மிகப் பாரதூரமான விபத்துக்கள் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்ப தீப்பற்றி ஏரிந்து கடலில் மூழ்கிப் போனமையுடன் அதிலிருந்து பிளாஸ்ரிக் மூலக்கூறுகள் யாவும் கடலில் கலந்துபோனமை, மற்றும் நியூ டைமன் கப்பல் நடுக்கடில் தீப்பற்றிக் கொண்டமை. இப்போது இந்த இரு சம்பவங்களுமே சுற்றுச் சூழலைத் தாண்டிய சர்ச்சையாக உருவெடுத்துள்ளன.**

**எக்ஸ்பிரஸ்பேர்ள்கப்பலினால்இலங்கைக்குஏற்பட்ட பாதிப்புக்களுக்காக அந்தக் கப்பல் நிறுவனத்திடமிருந்து 6 மில்லியனுக்கும் அதிகமான டொலரை இழப்பீடாகப் பெறமுடியும் என்று சொல்லப்படுகின்றது. இந்தப் பெருந்தொகை நிதியை அந்த நிறுவனம் செலுத்தாமல் இருப்பதற்காக 250 மில்லியன் ரூபாய் லஞ்சம் கொடுக்கப்பட்டிருப்பதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவித்திருக்கின்றார்.**

**அதேபோன்று, நியூ டைமன் கப்பலினால் சுற்றுச் சூழலிற்கு ஏற்பட்ட பாதிப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு முன்பாகஅந்தக்கப்பல்இலங்கைக்கடற்பரப்பில்இருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டிருக்கின்றது என்கிற விவகாரமும் சர்ச்சையாகிக் கொண்டிருக்கின்றது. இரண்டுவிவகாரங்களையும்நீதிஅமைச்சரேநாட்டுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.**

**இலங்கையில் லஞ்சம், ஊழல் புதியதொன்றல்ல. இதற்கு முன்னர் ஆட்சி அதிகாரத்தில் இருந்த பலர் மீதும் லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. 2015 ஆட்சி மாற்றமும் மைத்திரி – ரணில் தலைமையிலான நல்லாட்சி என்ற ஆட்சியும் அமைக்கப்பட்டமையும் இந்த லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துத்தான். ஊழல் புரிந்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் நாட்டிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் மீள இலங்கைக்குக் கெகாண்டுவரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.**

**அதற்கேற்றாற் போல நல்லாட்சி பதவிக்கு வந்ததும் சில பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ராஜபக்ஷ குடும்பத்தில் இருந்த சில சிறிய மீன்கள் மட்டும் தூண்டிலில் மாட்டின. சில நாள்கள் சிறையில் அடைக்கப்பட்டன. கடைசியில் எல்லா வழக்குகளில் இருந்தும் அவர்கள் விடுதலையாகிவிட்டனர். அல்லது பிணையில் வெளியே வந்துவிட்டனர். நல்லாட்சியில் லஞ்சம் ஊழலுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட ஒரு முறைப்பாட்டில் ஒருவர் கூடத் தண்டிக்கப்படவில்லை.**

**இந்த நிலையில்தான் இப்போது கப்பல் விவகாரங்கள் தொடர்பில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இவையும் வெறும் அரசியல் கூக்குரல்கள் போன்றே முடிந்துவிடாமல் இருப்பது அவசியம். எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனம் 6 மில்லியன் டொலருக்கும் மேற்பட்ட இழப்பீட்டை வழங்காமல் இருப்பதற்காகவே அந்த 250 மில்லியன் ரூபாய் லஞ்சம் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இப்போது சிங்கப்பூரில் பேர்ள் நிறுவத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. அங்கிருந்து இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் அதேநேரம் அந்த லஞ்சம் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்பது தொடர்பிலும் தீவிர விசாரணை நடத்தப்படுவது அவசியம்.**

**மோசடி செய்யப்பட்டது மக்கள் பணம். எனவே அதனை ஒரு அரசியல் குற்றச்சாட்டாக மட்டும் முன்வைத்து நகர்ந்துவிட முடியாது. 2015 ஆட்சியைப் போன்றல்லாது இந்த ஆட்சியலாவது லஞ்சமாகப் பெறப்பட்ட பணத்தையும் மீட்பதற்கும் இந்த மோசடியில் ஈடுபட்டவர்களைக் கண்டறிந்த தண்டனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

# மக்கள் சக்தியை உடைப்பது தமது நோக்கம் அல்லவாம்

### வஜிர அபேவர்த்தன கூறுகிறார்



பிரதான எதிர்க்கட்சிகள் இனியும் தலைதூக்கும் நிலைமைவராது, எல்லோரும் ஒன்றிணைந்து தேசிய இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் -

ஆசியாவின் முன்னேற்றமடைந்த நாடாக இலங்கை மாற வேண்டும் என்றால் எல்லோரும் தேசிய இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் பேசியுள்ளார்கள். என்னுடனும் பேசியுள்ளார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியை உடைத்து எடுப்பதல்ல இதன் நோக்கம். தேசிய இணக்கப்பாடுதான் எமது குறிக்கோள் எனத் தெரிவித்துள்ளார்.

## வளி மண்டல மாசடைவைக் கண்காணிக்கும் கருவி முல்லைத்தீவில் பொருத்தப்பட்டுள்ளது

பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக் காவினைச் சேர்ந்த டியூக் பல்கலைக்கழகம் என்பவற்றின் தொழிநுட்ப ஒத்துழைப்புடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் மாவட்டங்கள் தோறும் வளி மண்டல மாசடைவைக் கண்காணிக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் முல்லைத்தீவின் காற்று மாசடைவை அளவிடும் Bluesky Particulate Air Pollution Censor எனும் சாதனம் நேற்று (வியாழக்கிழமை) மாவட்ட செயலக வளாகத்தில் பேராதனைப்பல்கலைக்கழக தொழிநுட்ப குழுவால் பொருத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

இந்தச்சாதனம்ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் வளி மாசடைவு அளவீட்டை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கட்டுப்பாட்டு மையத்துக்கு அனுப்பிக் கொண்டிருக்கும்.

இந்தச் செயற்பாட்டில் பேராதனைப்பல்கலைக்கழக ஆய்வு அலுவலர் மகேஷ் சேனாரத்ன, மாவட்ட செயலக தகவல்தொழிநுட்ப உத்தியோகத்தர் யோ.மதுசூதன் மற்றும் முல்லைத்தீவு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சூழலியல் உத்தியோகத்தர் ந.சஜீவன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

## புத்தளத்தில் விபத்து: ஒருவர் பரிதாப சாவு!



புத்தளம் – கற்பிட்டி பகுதியில் பஸுடன் கெப் ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து பாலாவி – கற்பிட்டி சம்மட்டிவாடி பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் கற்பிட்டி – மண்டலக்குடா பகுதியைச்சேர்ந்த 32 வயதுடைய கெப் சாரதி என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கற்பிட்டியிலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸுடன், பாலாவியிலிருந்து கற்பிட்டி சென்ற கெப் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது கெப்பில் பயணித்த இருவரும் படுகாயங்களுக்குள்ளான நிலையில், புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து கெப்பின் சாரதி புத்தளம் ஆதார வைத்தியசாலையிலிருந்து சிலாபம் வைத்தியசாலைக்கு சென்ற வேளை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த கெப்பின் சாரதியின் சடலம் சிலாபம் வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மற்றுமொருவர் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஒரு லட்சம் ரூபாவுடன் வீதியிலிருந்து கண்டெடுத்த பணப்பையை உரிமையாளரிடம் ஒப்படைத்த சிறுமி!

### குவியும் பாராட்டு

வீதியோரமாக விழுந்து கிடந்த ஒரு லட்சம் ரூபா பணத் தொகை அடங்கிய கை பையை (ஹேண்ட் பேக்) கண்டெடுத்த சிறுமியொருவர் உரிமையாளருக்கு ஒப்படைத்த சம்பவமொன்று அண்மையில் அநுராதபுரம் மாவட்டத்தின் ராஜாங்கனையில் இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம், சிறிமாபுர மகா வித்தியாலயத்தில் தரம் 8 இல் கல்விகற்கும் குறித்த சிறுமி, அருகிலுள்ள தனது நண்பியின் வீட்டில் விளையாடிவிட்டு தனது வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்தபோது வீதியோராமாக கிடந்த கை பை (ஹேண்ட் பேக்) ஒன்றை கண்டெடுத்துள்ளார்.

வெற்று கை பை என நினைத்த எடுத்த அந்த சிறுமிக்கு, அந்த பணப்பை சற்று கடினமாக இருப்பதால் அதை திறந்து பார்த்தபோது, அதில் நிறைய பணத்தாள்கள் கிடப்பதை அறிந்துகொண்டாள்.

பிறருக்கு உரித்தான பொருள்களை நாம் வைத்திருப்பது தவறு என்பதை சிறு வயதிலிருந்தே பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் கூறுவதை கடைப்பிடித்து வந்த சிறுமி, குறித்த கை பையை உரிமையாளருக்கு ஒப்படைப்பதற்கு உதவுமாறு தனது நண்பியின் தாயாருக்கு கூறியுள்ளார்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர், அப்பகுதி பிரதேச சபை அதிகாரிகள் முன்னிலையில் கை பை உரிமையாளரான பெண்னிடம் கையளிக்கப்பட்டது. அவசர பணத்தேவைக்காகபணத்தை கை பையில் வைத்திருந்த போதே தனது கை பை தவறவிடப்பட்டதாகஅப்பெண் தெரிவித்திருந்தார்.

சிறுமியின் நற்செயலை பாராட்டி, அப்பகுதியிலுள்ள நலன்புரிச் சங்கமொன்று மேற்படி சிறுமியைக் கௌரவித்திருந்தது. இந்த சிறுமியின் இந்த செயல், அனைவருக்கும் முன்மாதிரியான செயலாகும் என்பதில் சந்தேகமில்லை.

பிறர் பணம் மற்றும் சொத்துக்களை அபகரித்து உல்லாசமாக வாழ்ந்து வருபவர்களுக்கு, இந்த சிறுமியின் செயல் ஒரு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

# அரசாங்க வைத்தியசாலைகளில் 112 மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

### சுகாதார அமைச்சர் தகவல்



அரச வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் 112 வகையான மருந்துகளுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில்நேற்று (வியாழக்கிழமை) உரையாற்றிய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக அரச வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் ஆயிரத்து 347 வகையான மருந்துகளில், 150 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இலங்கைக்குத் தேவையான மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் 50 பில்லியன் ரூபா அதாவது 13.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகின்றன எனவும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# 6 முஸ்லிம் அமைப்புக்களின் தடையை நீக்க நடவடிக்கை

### எச்.எம்.எம். ஹரீஸ் தகவல்

பாதுகாப்பு அமைச்சின் தடைப் பட்டியலில் உள்ள 11 முஸ்லிம் அமைப்புகளில் 6 அமைப்புக்கள் மீதான தடையை நீக்குவதற்கு தேவையான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி தம்மிடம் கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

விரைவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது தொடர்பில் ஜனாதிபதி, சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து முஸ்லிம் அமைப்புக்களின் தடை நீக்கம் தொடர்பாகக் கலந் துரையாடிய போது, ஜனாதிபதி இதனைக் கூறினார் என நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தாங்கள் முன்வைத்த வேண்டுகோளுக்கு அமைய, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பில் இதற்கான நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டதுடன் தடை செய்யப்பட்டவற்றில் 6 அமைப்புகள் எவ்வித பயங்கரவாத சம்பவங்களுடனோ, பயங்கரவாத அமைப்புகளுடனோ தொடர்பைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதனால் அந்த அமைப்புகள்மீதானதடைகள்நீக்கப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# கோழி இறைச்சி, முட்டை தொடர்பான பிரச்சினைகளை தீர்க்க அரசு கவனம்

கொழும்பு, ஏப். 28

கோழித் தீவன உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் சோளத்தை இறக்குமதி செய்வது தொடர்பான கலந்துரையாடல் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க ஆகியோரின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இறைச்சி, முட்டை மற்றும் கோழி வளர்ப்பு கைத்தொழிலை சீரான முறையில் முன்னெடுத்து, நாட்டின் கோழி மற்றும் முட்டை தேவையை தொடர்ச்சியாக பூர்த்தி செய்வது மற்றும் நியாயமான விலையில் நுகர்வோருக்கு வழங்குவது என்பன தொடர்பாக இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, கால்நடை தீவனத்துக்கு பயன்படுத்தப்படும் சோளத்தில் தற்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள அளவு, எதிர் காலத்தில் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் அளவு ஆகியவற்றை கணக்கிட்டு, இறக்குமதி செய்ய வேண்டிய சோளத்தின் அளவு தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறு சாகல ரத்நாயக்க விவசாய மற்றும் வர்த்தக அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இந்த அறிக்கையை துரிதமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் சமர்ப்பிக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கால்நடை தீவனமாக பயன்படுத்தப்படும் சோள உற்பத்தி மற்றும் அதன் விலைகள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி முதன்மையான கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், வருடாந்த சோளத் தேவையில் இறக்குமதி செய்ய வேண்டிய அளவை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரங்களை விரைவாக வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சாகல ரத்நாயக்க இதன்போது அறிவுறுத்தினார்.

உலக சந்தையில் சோளத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ள சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்வதன் மூலம் உள்நாட்டு சோளத் தேவையை நெருக்கடியின்றி பூர்த்தி செய்ய முடியும் எனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போதைய அரிசி தேவையை விட உள்நாட்டு அரிசி உற்பத்தி அதிகமாக உள்ளதால், அதிகப்படியான அரிசியின் ஒரு பகுதியை கால்நடை தீவனத்துக்கு பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், மேலும் கால்நடை தீவனத்துக்கு அரிசியை பயன்படுத்த அரசாங்கம் விதித்துள்ள பல்வேறு கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

எனவே, மக்களின் அரிசி நுகர்வுத் தேவையையும், தற்போதைய அரிசி உற்பத்தியையும் துல்லியமாக மதிப்பீடு செய்து, அதிகப்படியான அரிசி கையிருப்பை கணக்கிட்டு, உடனடியாக அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறு விவசாய மற்றும் வர்த்தக அமைச்சின் அதிகாரிகளுக்கு சாகல ரத்நாயக்க பணிப்புரை விடுத்தார்.

மேலதிகமான உள்ள அரிசி இருப்புக்களை இதற்காக பயன்படுத்துவதன் மூலம் விவசாயிக்கான அரிசியின் விலையை ஸ்திரமாக பேணவும், கால்நடை தீவனத்துக்காக இறக்குமதி செய்யப்படும் சோளத்தின் தேவையைக் குறைக்கவும் முடியும் என்பதை சுட்டிக்காட்டியதோடு, இதன் மூலம் அந்நிய செலாவணியை சேமிக்க முடியும் எனவும் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட, வர்த்தக அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி. அதபத்து மற்றும் விவசாய அமைச்சு, நிதி அமைச்சு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள், கோழி மற்றும் முட்டை உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் குழு இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# சீர்திருத்தங்களை முன்னெடுக்க அனைவரதும் ஆதரவு அவசியம்

## 2022 ஆண்டுக்கான அறிக்கையில் மத்திய வங்கி தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 28

இலங்கையின் பொருளாதாரத்துக்கு தசாப்த காலமாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ள விடயங்களுக்குத் தீர்வைக் காண்பதற்கான சீர்திருத்தங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என இலங்கையின் மத்திய வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையிலேயே இலங்கை மத்திய வங்கியின் இந்த வேண்டுகோள் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தைக் கடந்த ஏழு தசாப்தகாலமாக பாதித்துள்ள கட்டமைப்பு இடையூறுகளுக்கு தீர்வைக் காண்பதற்கு அவசியமான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஆதரவை இலங்கை அரசாங்கமும் மத்திய வங்கியும் அனைத்து பங்குதாரர்களும் வழங்க வேண்டும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தத் தவறினால் அது முடிவற்ற நிரந்தர பிணை எடுப்புகள் வெளிநாடுகளிடமிருந்து நிதி உதவி பெறும் தொடர்ச்சியான செயற்பாடுகள் மீண்டும் மீண்டும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மிகவும் பதற்றமான வர்த்தக சுற்றுக்கள் போன்றவற்றுக்கு வழிவகுக்கும் என மத்திய வங்கி 2022 ஆம் ஆண்டுக்கான தனது ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது பொதுமக்கள் மீது தேவையற்ற அழுத்தங்களைத் திணிக்கும், நாடு நீண்டகால பொருளாதார அபிவிருத்தியை அடைவதைத் தடுக்கும், எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்யை இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டது. 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 35 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையின் 73 ஆவது ஆண்டறிக்கை 27 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பி. நந்தலால் வீரசிங்கவால் ஜனாதிபதியும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

# விசேட மே தினக் கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடுகள்!

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு விசேட மே தின கூட்டமொன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய தொழிற்சங்க பிரதிநிதிகள், வரிவிதிப்பு உள்ளிட்ட தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இன்னும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளை வழங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

அரச ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் இதுவரை நேரடியாக தலையிடவில்லை எனவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.





OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555
conditions apply*

# காத்திருந்தவன் பெண்டாட்டியை...

என் சத்திய மூர்த்தி

சென்னை 27 ஏப்ரல் 2023

பயங்கரவாத தடை சட்டம் மற்றும் சிங்கள ஆக்கிரமிப்பு ஆகியவற்றை எதிர்த்து வடக்கு–கிழக்கு மாகாணங்களில் தமிழர் கட்சிகளின் கடையடைப்பு போராட்டம் வெற்றி அடைந்துள் ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கு அரசிடமிருந்து சரியான தீர்வு கிடைக்கா விட்டால், தமிழ் சமூகம் சட்டமறுப்பு போராட்டத் திற்கு தள்ளப்படும் என்று தமிழ் அரசு கட்சியின் சுமந்திரன் பாராளுமன்றத்தில் அறிவித் துள்ளார். இந்த அறிவிப்போது போராட்டத்திற்கு அழைப்பு விடுத்த ஏழு கட்சியினருக்கும் உடன்பாடு உண்டா, அல்லது. சுமந்திரனின் தனிநபர் முன்னெடுப்பா என்பது தெரியவில்லை.

இதனோடு தொடர்பு இல்லை என்றாலும், நீதிமன்ற உத்தரவின் படி, வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் பூசைகள் மீண்டும் துவங்கியுள்ளது என்ற செய்தி வரவேற் கத்தக்கது. இதுவே, கச்சத்தீவில் திடீரென்று தோன்றிய புத்தர் சிலையை கடற்படையினரே அகற்றிவிட்டார்கள் என்ற செய்திக்கும் பொருந்தும்.

கதவடைப்பு போராட்டத்திற்கு இடையே, எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா கூட்டிய அனைத்து கட்சி கூட்டத்தில் எப்போதுமே தனி யாவர்தனம் வாசிக்கும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் மட்டும் கலந்து கொண்டார். அவருக்கு அதே பிரச்னையில், சஜித்தை விட காட்டமான முடிவு எடுத்துள்ள பிற தமிழ் கட்சிகளுடன் மட்டுமே உடன்பாடு இல்லை.

சஜித் கூட்டிய கூட்டத்தில், சுமந்திரன் உள்ளிட்ட முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பு கட்சிகளின் பிரதிநிதிகள் யாரும் கலந்து கொள்ளவில்லை. அவர்களுக்கு சிங்கள அரசியல் அல்லது சிங்களவர்களுடனான அரசியல் கசந்து விட்டது என்று கருத இடமிருக்கிறது.. இதுவே, ஆயுத போராட்டம் இல்லாமலே, தமிழர் அரசியலை உள்வீட்டு அரசியலாக மீண்டும் மாற்றிவிடும்.

**தீவிரவாதி முத்திரை**

சுமந்திரன் போன்ற தனியொரு அரசியல் வாதியின் விருப்பு–வெறுப்புகளை சஜித் பிரேமதாசாவோ அல்லது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கேவோ சம்பாதிப்பது ஒரு விதம் ஆனால், அவர்களும் சரி, பிற சிங்கள கட்சி தலைமைகளும் சரி, தமிழ் சமூகத்தையும் அவர்களின் நியாயமான அபிலாசைகளையும் கோரிக்கைகளையும் தொடர்ந்து புறக்கணித்து வருவது வேறு லெவல்.

அதன் வெளிப்பாடே. பாராளுமன்றத்தில், பயங்கரவாத தடை சட்டம் அல்லது சட்டங்கள் குறித்து பேசிய சாணக்கியனை 'புலி' என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தாக்கியது. கடந்த பாராளுமன்ற கூட்டதொடர்களிலும் ஏதாவது ஒரு தமிழ் எம்.பி இவ்வாறான ஏசலுக்கு இலக்காகி உள்ளனர்.

அதாவது, தமிழர்கள் விடுதலை புலிகள் அமைப்பிடமிருந்து விலகி நின்று அரசியல் செய்ய விரும்பினாலும், அவ்வாறு மட்டுமே முத்திரை குத்துவது, சிங்கள பேரினவாத அரசியலுக்கு அவசியமாகி விட்டது. பேரின வாதம் பேசாத சிங்கள அரசியல்வாதிகளுக்கும் கூட, இது போன்ற சொற்றொடர்களை வீசினால், தங்களது வாக்காளர் மத்தியில், நம்பிக்கைக்குரிய இனவாதி என்ற எண்ணம் தோன்றிவிடாதா, என்ற நப்பாசை. சிறுபான் மையினர் என்பதற்கு அப்பால் தீவிரவாதி என்று தமிழ் அரசியல்வாதிகளுக்கு முத்திரை குத்துவது அவர்களுக்கு தேவை யாகிறது.

இதனை புரிந்து கொண்டாலே, வெடுக்குநாறி கோவில் உள்ளிட்ட சமூக–அரசியல் விவகாரங் களில் ஜனாதிபதி ரணிலின் பாராமுகத்திற்கு விடை கிடைத்துவிடும். அதாவது, இந்த பகுதிகளில், தொல்லியல் திணைகளத்தின் அடாவடித்தனம் சிங்கள பேரினவாதத்தின் வெளிப்பாடே என்பது புரியும்.

**சிங்களமயப்படுத்தல்**

பாராளுமன்றத்தில் சுமந்திரன் கூறியது போல், கிழக்கு மகாணத்தில் ஒரு பகுதியில் மட்டும், தொல்பொருள் திணைகளம், தமிழ்–முஸ்லீம் சமூகத்தினரின் 3,000 ஏக்கர் காணியினை கையகப்படுத்தி உள்ளது. அவர் கூற்றின் படி, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூர்யா அமைச்சராக இருந்த காலத்திலேயே இந்த பிரச்னை தோன்றி விட்டது.

அப்போது, 3000–ல் இருந்து 300 ஏக்கராக குறைந்த தொல்பொருள் திணைகளத்தின் காணி தேவை, மீண்டும் பழைய லெவலுக்கு உயர்ந்துள்ளது. அதாவது, ராஜபக்சாக்கள் பதவியில் இல்லாத காலத்திலும் இது போன்ற அரசு இயந்திரம் மூலம் சிறுபான்மையினரின் உடமை பறிப்பு அரங்கேறி வருகிறது.

இனப்போர் காலகட்டத்தில், தமிழர்கள் காணி பறிப்பிற்கு, அரசு இராணுவத்தை பயன் படுத்தியது என்று கூறுவோர் உள்ளனர். அதற்கு முன்னரும் பின்னரும் தொல்பொருள் திணைகளம் மற்றும் வனத்துறையினர் இந்த பணியை செய்கிறார்கள். என்றாலும், கீரி மலை, வெடுக்குநாறி போன்ற இடங்களில் தொன்மையான தமிழர்களின் ஆலயங்களை ஆக்கிரமித்து, அவற்றை பௌத்தமதப்படுத்தும் வகையில் அடித்து நொறுக்குவது என்பது ஏற்புடையதல்ல.

சுதந்திரத்திற்கு முந்தைய காலகட்டத்தில், கிழக்கு மாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நீர்பாசன திட்ட பகுதிகளில், நாட்டின் பிற மாகாணங்களில் இருந்து சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். இது போன்ற செயல்கள் அனைத்து நாடுகளிலும் வெவ்வேறு காலகட்டங்களில் அரங்கேறியுள்ளன என்பது வேறு விடயம்.

**கோட்டாவின் கைங்கர்யம்**

இந்த பின்னணியில், மஹிந்த ராஜபக்சா தலைனையிலான மொட்டு கட்சிக்கு ஒரு புத்த பிக்குவை தவிசாளராக அறிவித்திருப்பது, கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம். அறகலயா போரட்டகாலம் வரை இந்த பதவியை வகித்து விட்டு, பின்னர் எதிரணிக்கு தாவிய பேராசிரியர் ஜீ எல் பீரிஸின் பதவி, உதுறவல தம்மரத்ன தேரரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

ஒரு விதத்தில், இந்த பதவி, தம்மரத்ன தேரருக்கு முன்னரே சென்றிருக்க வேண்டும். காரணம், சுதந்திர கட்சியில் இருந்து பிரிந்து சென்று 2016–ம் ஆண்டு, இலங்கை பொதுஜன முன்னணி என்ற பெயரில் மஹிந்தா புதிய கட்சியை துவங்கிய போது, அதற்கான தாமரை மொட்டு சின்னத்தை கொடுத்துதவியது, தேரர் சார்ந்திருந்த கட்சி தான். அதற்கு முன்னரே அந்த கட்சி மூன்று அவதாரங்களை எடுத்தி ருந்தது. தொடர்ந்து கிரிக்கெட் மட்டை சின்ன த்தில் தேர்தலில் போட்டியிட்டு படுதோல்வியை கண்டிருந்தது.

இந்த பின்னணியில், மஹிந்தாவின் சின்னம் என்று அறியப்பட்டதாலேயே, மொட்டு கட்சிக்கு என்று ஒரு வாக்குவங்கி உருவானது. அதன் உரிஷ்யாளரை மஹிந்தா தற்போது கௌரவிக்கிறார். அல்லது தற்போதாவது கௌரவிக்கிறார் என்று கூறலாம். வேண்டு மென்றால், பீரிஸின் இடத்தில் இன்னொரு அறிவுஜீவியையே நியமித்துள்ளார் என்று கூட எடுத்துக்கொள்ளலாம்.

**பேரினவாத வாக்குவங்கி**

முன்னவர் அரசியலமைப்பு சட்ட வகையா றாக்களில் மேற்குலத்தாலும் மதிக்கப்படும் மேதை என்றால், பின்னவர் உள்நாட்டில் விலைபோகும் பௌத்த மத விவகாரங்களில் சீன பல்கலைகழகம் ஒன்றில் கலாநிதி பட்டம் பெற்றவர். சீன மொழியிலும் தேர்ச்சி பெற்றவர். அவரது சீன தொடர்புகள் இந்த பதவியை பெற்றுக்கொடுத்ததா, என்பது தெரியவில்லை.

உண்மை என்னவோ. தனது தலைமைக்கும், தனது ராஜபக்சா குடும்பத்திற்கும் சிங்கள மக்களிடையே ஆதரவு இல்லவே இல்லை என்று புரிந்துகொண்ட பின்னரே, மஹிந்தா இந்த அஸ்திரத்தை கையில் எடுத்துள்ளார். அதாவது, தான் இழந்த பேரினவாதத்திற்கு அப்பாலான சிங்கள–பௌத்த வாக்குவங்கிக்கு பதிலாக, தேரரால் ஒரு புதிய பேரினவாத வாக்குவங்கியை உருவாக்க முடியுமா, என்று வெள்ளோட்டம் பார்க்கிறார்.

அதாவது, உள்நாட்டில் செல்லுபடியாகும் என்று சிங்கள அரசியல்வாதிகள் கருதும் பேரினவாதத்தின் முகமாக தம்மரத்ன தேரர் திகழ்கிறார். அது போன்றே, சர்வதேச உறவுகளில், ராஜபக்சாக்களை ஓரம் கட்டி, ஒழித்துக்கட்ட முயற்சி செய்யும் மேலை நாடுகளுக்கு சீனா தான் ஒரே செக். முக்கியமாக, ஐநா சார்ந்த பாதுகாப்பு சபை, மனித உரிமை ஆணையம் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஆகிய அமைப்புகள் எடுக்கும் முடிவுகளில் சீனா மற்றும் ரஸ்யாவின் தடுப் பதிகார வாக்கு அல்லது 'வீட்டோ' இலங்கை அரசிற்கும், ராஜபக்சா தலைமைக்கும் அவசியமாகிறது.

இது தவிர, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தற்போது முன்னிலையில் இருக்கிறது என்று கருதப்படும் ஜேவிபி தலைமையும், இனப் பிரச் சனை விடயங்களில் பேரினவாத கருத்துக்க ளையே தொடர்ந்து முன் வைத்துவருகிறது. இதே பிரச்சனையை கையில் எடுப்பதும், ஜேவிபி யை விட அதிகமாக பேரினவாத கருத்துக்களை முன் வைப்பதும், மஹிந்தாவை பொறுத்த வரை யில், காலத்தின் கட்டாயம். இந்த இரு கட்சிக ளின் போர் பாடல்களுக்கு இடையில் ரணிலும் சஜித்தும் கூட அதே லாவாணியை தான் பாட வேண்டும் கட்டாயத்திற்கு தள்ளப்படுவார்கள்.

**ரணிலுக்கும் எச்சரிக்கை**

அது போன்றே. ஒரு புத்த பிக்குவை கட்சி தவிசாளராக்கியதன் மூலம், மஹிந்தா, தான் தாங்கி பிடிக்கும் ரணில் தலைமைக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார். மொட்டு கட்சியின் ஆதரவுடனேயே பாராளுமன்றத்தில் பெரும் பான்மை பெற்றுள்ள ரணில் தலைமை, மஹிந்தாவை சார்ந்திருப்பதை குறைத்துக் கொள்ளவேண்டும் என்று தொடர்ந்து எடுத்து வரும் முயற்சிகளுக்கு இன்னமும் பலன் கிடைக்கவில்லை.

சஜித் பிரேமதாசாவின் மக்கள் சக்தி கட்சியில் இருந்து எதிர்பார்த்து போல், ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூட கட்சி மாறி, ரணி லின் ஐக்கிய தேசிய கட்சியில் மீண்டும் இணை யவில்லை. ஆனாலும், ரணில், சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனாக தனது முயற்சி களை தொடர்ந்து வருகிறார்.

அந்த வகையில், மொட்டு கட்சியை கழற்றி விட்டுவிட்டு, ரணில் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலை சந்திப்பார் என்றால், மஹிந்தா தரப்பில் இருந்து தம்மரத்ன தேரர் களமிறக் கப்படுவார் என்று எண்ணுவதற்கு தற்போது இடமிருக்கிறது. என்றாலும், ஜனாதிபதி தேர்தலில் ரணிலே, மஹித்தாவின் முதல் தேர்வு. ரணிலின் வெற்றி, ராஜபக் சாக்களுக்கு முக்கியம்.

அதை விட முக்கியம், தேர்தலில் வெற்றி பெற்றால், ரணில் மீண்டும் சஜித் கட்சியை உடைத்து தனக்கு பலம் சேர்த்துக்கொண்டு, ராஜபக்சாக்களை நடுத்தெருவில் விட்டுவிட மாட்டார் என்ற உறுதிமொழி. அவ்வாறு நடந் தால், ராஜபக்சாக்கள், காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்றுவந்தவன் கொண்டு போன நிலைமைக்கு தள்ளப்படுவார்கள். அதனை தவிர்த்துக் கொள்ளும் முயற்சி யாகவும் மஹிந்தா, தம்மரத்ன தேரரை தேர்தல் களத்தில் இறக்க முயலலாம்.

காலைக்கதிர்
Kalaikkathir



உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்



# ஒழுக்கம்

**ஒழுக்கம் விழுப்பம் தரலாம்**

ஒழுக்கம்உயிரிலும்ஓம்பப்படும்என்பதுவள்ளுவர் வாக்கு ஆகும். மனிதனுடைய வாழ்க்கையையும் மனிதனுடைய சிறப்பு செயல்களையும் மனிதன் செய்யும் ஒழுக்கமான செயல்களே நிர்ணயிக்கிறது. ஒழுக்கம் தொடர்பான திருக்குறள்கள் பல நாம் கூறலாம். ஆனாலும் ஒழுக்கத்தைக் கூறும் நல்ல மனிதர்கள் உலகில் ஒரு சிலர் மட்டுமே உண்டு. ஒழுக்கத்தில் இருக்கும் மனிதர்கள் எப்போதும் பணிந்து நடந்து கொள்வார்கள். ஒழுக்கம் என்பது நம்முடைய வாழ்விற்கு முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. உலகில் ஒழுக்கமான மனிதர்களாக நூற்றிற்கு அறுபது வீதமே காணப்படுகின்றனர். ஒழுக்கம் என்பது நம்முடைய வாழ்வை மட்டுமல்ல நாம் வேறு இடங்களுக்கு செல்லும் போது கூட நம்முடனும் வந்து கொண்டிருக்கிறது. நாம் ஒழுக்கத்தால் பல வேலை வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்கிறோம். நாம் உலகில் வாழ தகுதி வேண்டும் என்றால் அது நம்முடைய ஒழுக்கத்தினால் மட்டுமே கிடைக்கின்றன. செல்வம்இ பணம்இ வாழ்க்கை அனைத்தும் வந்து வந்து மாறி மாறிச் செல்லும். ஆனால் ஒழுக்கம் மட்டும் நம் உடலுடன் ஒன்றாகச் சேர்ந்து செல்கின்றன. ஒழுக்கம் என்பது முக்கிய செல்வமாக தற்போதைய காலத்தில் கூறப்படுகிறது. தற்போதைய மக்கள் ஒழுக்கம் இன்ற பெற்றோரை மதியாமை, பெரியோருக்கு கீழ்ப்படியாமைஇ போதை வஸ்துக்கு அடிமை ஆகுதல் என்பன ஒழுக்கம் இன்றிப் போகும் பல நடத்தைகள் ஆகும். ஒழுக்கத்தில் உள்ளவர்கள் ஒரு போதும் இவ்வாறான காரியங்களை செய்ய மாட்டார்கள். எவரும் எவருடைய ஒழுக்கத்தையும் அவமதிக்க மாட்டார்கள். ஒழுக்கமே விழுப்பம் தரும் என்பது உறுதியான வாக்கு.

**ஒழுக்கம் உயரி;லும் ஓம்பப்படும்**

ஒழுக்கம்என்பதுஉயிரிலும்ஓம்பப்படும்என்பதன் கருத்துநாம்எங்குசென்றுஒழுக்கத்தைப்பற்றியெல்லாம் கூறுகிறோமே அங்கெல்லாம் நமக்குப் பெருமை. ஒருவரின் ஒழுக்கம் என்பது அவருடைய வாழ்வின் நிராகரிப்பை சுத்திகரிக்கக் கூடிய செயலாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு ஒழுக்கம் சொல்லிக் கொடுப்பதற்கு முன்பு நமக்கு நல்லொழுக்கம் இருக்கா என்பதை அறிந்து கொள்ள வேண்டும். முற்கால மக்கள் ஒழுக்கத்தின் காரணமாகவே சண்டைஇ வாய் மொழிப் பேச்சு என்ற தீய பழக்கங்களில் ஈடுபடாது தமது கலாசாரத்தை விட்டுக் கொடுக்காது இன்றும் துணிந்து போராடிக் கொண்டிருக்கின்றனர். புராதன கால மக்கள் ஒழுக்கம் என்பதே என்;னவென்று தெரியாது தீய பழக்கங்களையும்இ தீய செயல்களையும் செய்து ஒழுக்கம் பற்றி வருங்கால சந்ததியினருக்கு ஒழுக்கம் என்ற சொல்லே தெரியாத அளவிற்கு இவ்வுலகை கொண்டு செல்லப் போகிறார்கள். எமது நாட்டின் நிலைமைக்கும் ஒரு முக்கிய காரணமாக ஒழுக்கம் ஒரு சிறு இடம் வகிக்கிறது. இந்நாட்டில் ஒழுக்கம்இ கலாசாரம் இல்லை என்பதால் தான் இந்நாட்டு மக்கள் வேற்று நாட்டிற்குச் செல்ல முயல்கின்றனர். இந் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்றால் எமது முற்காலத்தில் இருந்த ஒழுக்கம்இ பழக்கம்இ கலாசாரம என்பவற்றை மீண்டும் கொண்டு வரவேண்டும். ஒழுக்கத்தின் சாயலாகவே மனிதன் வாழ தகுதி உடையவனா என இறைவன் கணக்கு வகுக்கிறான். ஒழுக்கம் அற்று வாழும் மனிதன் கடைசிக் காலகட்டத்தில் நரகத்திற்குச் செல்வான் என்பது ஆதி பகவானின் ஒரு கூற்றாகும். இக் கால கட்டத்தில் ஒழுக்கம் உள்ளவன் எங்கு சென்றாலும் அவனிற்கு ஓர் மரியாதை உண்டு என்பது ஓர் உண்மையான வாக்கு ஆகும்.


மற்றவரின் வாழ்க்கைக்கு தேவையாக ஒழுக்கம் நமக்குத் தெரியாது. ஆகவே அவரவர் மதிப்பு அவரவர் பழக்கங்களில் தெளிவுற வேண்டும். ஒழுக்கத் ஒன்பது எமக்கு கிடைக்கும ஓர் வரம் என்றும் கூறலாம். ஒழுக்கம் என்பது எல்லோர்க்கும் கிடைப்பதில்லை. ஒழுக்கம் கிடைக்கும் என நம்புபவர்கள் ஒழுக்கமான செயல்களை செய்வதில்லை. ஒழுக்கம் கிடைப்பதில்லை என இருப்பவர்கள் தம்மை அறியாமலே மற்றவர்களுக்கு உதவி செய்து ஒழுக்கம் என்னும் வரத்தைப் பெறுகின்றனர்.

நாம் ஒழுக்கம் என்ற சொல்லை சொல்ல வேண்டும் என்றால் ஒழுக்கமான செயல்களை செய்ய வேண்டும். ஒழுக்கத்தின் கூலியாம் நல்வாழ்வு என்று சிலர் கூறுவர். ஒழுக்கம் என்பதற்கு எவ்வளவு திருக்குறளை கூறலாம.; இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்ற பழமொழியை ஒழுக்கத்திற்கு முன்னுதாரணமாக கூறலாம். இதனைப் போன்று பல பழமொழகள் ஒழுக்கம் பற்றி விபரித்து நிற்கின்றன. ஒழுக்கம் செய்வோர் மற்றவர்களின் வாழ்க்கைகளின் சந்தோசங்களையும், துன்பங்களையும் தம்மிலும் பகிர்ந்து கொள்ளும் நல் மனம் கொண்டவராக இருப்பார்கள். இது மட்டுமல்ல இன்னும் பல இரக்கச் செயல்களையம் செய்வார்கள்.மனிதனாகப் பிறந்த நாம் ஒழுக்கத்தின் பிள்ளைகளாக வாழ வேண்டும் என்பதற்காகவே கிறிஸ்தவர்களாகிய நாம் எமது பங்கு ஆலயம் மூலம் திருமுழுக்கு என்றும் ஒரு திருவருட்சாதனத்தை நாம் பெறுகிறோம்.

நமக்கு முன்பு வாழ்ந்த முன்னோர்கள் ஒழுக்கம் பற்றிய பழக்கங்களை தெரிந்து கொள்ள பல நூல்களை படித்துக் கொண்டனர். அவற்றில் முக்கிய நூல்களை ஞாபகமாக வெளியிட்டிருந்தமை அவற்றுள் சில அர்ச்சந்திரன் நாடகம் ஒழுக்கம்இ சிவகுமரன் நாடகம் என்பன பார்த்து ஒழுக்கம் பற்றிய அறிவு வந்ததாக பல நூல்களில் வெளியிட்டிருந்தமை காணத் தக்கதாக உண்டு. நாம் ஒழுக்கத்தில் வாழ்ந்து எமது முன்னோர்கள் காப்பாற்றிய கலாசாரம்இ பழக்க வழக்கம் என்பவற்றை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பது ஒரு கடமையாகும்.

வி.சைந்தவி
யா/சென் ஜேம்ஸ்
மாகாவித்தியாலயம்

# வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்



வாசிப்பு என்பது எமது அன்றாட வாழ்வில் இன்றியமையாத ஒரு விடயமாகும்.தற்போதைய நவீன உலகில் கைகளில் பணத்துடன் செல்வதை விட ஒவ்வொரு நபரும் கைகளில் தொலைபேசியுடனே செல்வதை இனங்காணக்கூடியதாக உள்ளது. இப்போதெல்லாம் நாம் எமது மூளைக்கு வேலை கொடுப்பதைவிட எமது கையடக்கத்தொலைபேசிக்கே வேலை கொடுக்கின்றோம். முன்னைய காலங்களில் பெரிய அறிஞர்கள் எல்லோரும் பல வகையான புத்தகங்களைக்கற்றுத்தான் பல வகையான கண்டுபிடிப்புக்களை முன்வைத்தனர். எனினும் தற்போதைய கால மக்கள் புத்தகங்களை வாசித்து அறிவை பெற்றுக்கொள்வதை விடுத்து, நவீன செல்லிடத்தொலைபேசி, தொலைக் காட்சிகளைப்பார்வையிட்டு அறிவை மழுங்கடிக்கின்றனர்.எப்போது நாம் வாசிப்பை எமது தினசரி நடவடிக்கையாக முன்னெடுக்கின்றோமோ அன்று தான் நாம் பூரண மனிதராக மாறமுடியும்.

எப்போது, எமது சிந்தனையும் செயலும் ஒருங்கே சேர்ந்து பல புத்தகங்களை வாசித்து அறிவை வளர்க்க வேண்டும்.என்ற எண்ணம் எம்மனதில் தோன்றுமானால் அன்றுதான் நாம் ஒரு பூரண மனிதராக உருவெடுக்க முடியும்.என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இன்று ஒவ்வொரு நகர்புறங்களிலும் ஒவ்வொரு நூல்நிலையங்களை இனங்காணக்கூடியதாக உன்னது. ஆனால் அங்கு சென்று வருபவர்கள் பெரும்பாலானோர் நூலகர்களே ஆவார். எதற்காக எமக்கு இவ்வளவு வசதிகள் கிடைத்தும் அவற்றை பயன்படுத்தாமல், அலட்சியப்படுத்துகிறோம்? பலவேறு பாடசாலைகளில் நூல்நிலையங்கள் நிறுவி,அதற்கு பொறுப்பாக ஆசிரியரை நியமித்து வருகின்றது அரசாங்கம். எதற்காக? யாருக்காக? இவற்றையெல்லாம் செய்கின்றது. அரசாங்கம் எல்லாம் மாணவர்களின் நன்மை கருதி என்பதை கட்டாயம் மாணவர்களாகிய நாம் அறிந்திருக்க வேண்டிய ஒரு விடயமாகும்

பல பாடசாலைகளில் ஒருபாட வேளையாக நூலகப்பாடவேளை காணப்படுகின்றது.பாடசாலை நிர்வாகம் அதனை மாணவர்களின் வாசிக்கும் திறனை மேம்படுத்துவதற்காகவே அமைத்துக் கொடுத்துள்ளது. ஆனால் ஒரு சில ஆசிரியர்கள் அந்தப்பாடவேளை தங்கள் முழுத்திறமைகளையும் மாணவர்களுக்கு வழங்கி விடுவதைப்போல் அப்பாடவேளைக்கு தங்கள் பாடங்களைக் கற்பிப்பது ஒரு மரபுவழிமுறையாக தொன்று தொட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.பாடசாலை நூலகம் அமைத்தது, பாடசாலை மாணவர்களின் புத்தகத்தை வாசிக்கும் திறனை மெருகூட்டி,மாணவர்களுக்கு தேடிபெற்றுக்கற்றுக்கொள்ளும் ஆளுமையை வளர்ப்பதற்காக மட்டுமே ஆனால் சில பாடசாலை ஆசிரியர்கள் நூலகம் அமைத்ததற்கான கருப்பொருளைவிளங்கிக்கொள்வதில்லை.





பல புத்தகங்களைத்தேடி பெற்று அறிவை வளர்க்கும் நோக்கில் எப்போது செயற்படத்தொடங்குகின்றோமோ அப்போது தான் ஒரு பூரண மனிதன் உலகில் அவதரிப்பான். வாரத்தில் ஒரு நாளாவது நூலகத்திற்குச் சென்று பல வகையான புத்தகங்களைத் தேடி வாசித்து நலம் பெற வேண்டும்.பல ஞானிகள் கூறியுள்ளனர்.மன அமைதியைப்பெற வேண்டுமாயின் முதலில் செல்ல வேண்டியது கோயிலுக்கு, இரண்டாவது செல்ல வேண்டியது நூலகத்திற்கும் என்று, அவர்கள் அதனை அனுபவித்து உணர்வதாலேயே இவ்வாறாகக் கூறியுள்ளனர். 'ஒரு நல்ல புத்தகம் ஒரு நல்ல நண்பன்' என்று சும்மாவாகவா? பல கல்விமான்கள் கூறியுள்ளனர். உலகறியும் உண்மை இதுவே. நமது வாழ்வில் முக்கியமான அங்கமாகத் திகழும் நபர் என்றால் நண்பர் என்றே கூறுவோம். ஆனால் அத்தகைய நண்பருக்கு ஒப்பாக ஒரு புத்தகத்தைக்கூறுவது என்பதனை நோக்கினால், எமது வாழ்வின் ஒரு அத்தியாவசியத்தேவையாக புத்தகமே காணப்படுகின்றது. எனவே 'வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்' இதனை உணர்ந்துகொண்டால் வாழ்க்கையில் உயர்வடையலாம்.என்ற பொன்மொழிக்கமைய வாழ்வோம்.

மா. ஹரிஷாஞ்சலி
யா/ இந்து மகளிர் கல்லூரி


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.04.2023இல் வெளியிடப்பெற்றது.

**நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.**

பக்கங்கள்: 04

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 14 வியாழக்கிழமை 27.04.2023 கதிர் 41

## இரகசிய சந்திப்புக்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசில் இணைவதற்கு முடிவெடுத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த மூன்று வாரங்களில் மாத்திரம் கொழும்பில் 5 தடவைகள் இரகசியச் சந்திப்புக்களை நடத்தியுள்ளனர் என்று அறியமுடிகின்றது.

அரசுடன் இணைவது தொடர்பில் பல விடயங்கள் இந்தச் சந்திப்புக்களின் போது பேசப்பட்டுள்ளன.

இறுதியாக நடைபெற்ற சந்திப்பில் அனைவரும் ஒரே தடவையில் குழுவாகச் சென்று அரசுடன் இணைவதா அல்லது கட்டம் கட்டமாக இணைவதா என்பது தொடர்பில் முக்கியமாகப் பேசப்பட்டுள்ளது.

சகலரும் ஒரே 2

# வெடுக்குநாறிமலையில் சைவ விக்கிரகங்களை மீள அதேயிடத்தில் வைக்க நீதிமன்று உத்தரவு

(ந.லோகதயாளன்)

வவுனியா, நெடுங்கேணி-வெடுக்குநாறி மலையிலிருந்து அண்மையில் உடைத்து அழிக்கப்பட்ட ஆதி சிவன் ஆலயத்தின் விக்கிரகங்களை மீண்டும் அதேயிடத்தில் வைப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் தேவராசா சுபாஜினி முன்னிலையில் குறித்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது::

வெடுக்குநாறி மலையில் வழிபாடுகளை மேற்கொள்ள ஏற்கனவே நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில், நேற்று அங்கு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன எனினும், விக்கிரகங்கள் இன்றி அங்கு வழிபாடுகள் நடத்தப்பட்டமை தொடர்பிலும், வெடுக்குநாறி மலையிலிருந்த விக்கிரகங்கள் மற்றும் பூஜைப் பொருட்கள் ஆகியன பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ளமை தொடர்பிலும் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சமர்ப்பணங்களை ஆராய்ந்த வவுனியா நீதிவான், வெடுக்குநாறி மலையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட விக்கிரகங்களை அதே இடத்தில் மீண்டும் வைக்குமாறும், பூஜைப் பொருட்களைச் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கையளிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

தொல்லியல் திணைக்களத்தின் மேற்பார்வையுடன் விக்கிரகங்கள் மீள பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார். மேலும், பூஜை வழிபாடுகளுக்கு எவ்வித இடையூறுகளையும் விளைவிக்காதிருப்பதற்கும், அங்கு பாதுகாப்பு மேற்பார்வைகளை மாத்திரம் மேற்கொள்வதற்கும் பொலிஸாருக்கு நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்டது.

அத்துடன், வெடுக்குநாறி மலையிலிருந்த விக்கிரகங்களைச் சேதப்படுத்தியமையுடன் தொடர்புடைய குற்றவாளிகளைக் கைது செய்வதைத் துரிதப்படுத்துவதற்கும் பொலிஸாருக்கு நீதிவானால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. தொடர்ந்து வழக்கு விசாரணையை மே 17 மீண்டும் நடத்துவதற்கு நாள் குறிக்கப்பட்டது - என்றார். (02)

# இலங்கை அரசு கடும் கண்டனம்



முன்னாள் கடற்படைத் தளபதியும் தற்போதைய வட மேல் மாகாண ஆளுநருமான அட்மிரல் வசந்த கரன்னாகொடவைக் கறுப்புப்பட்டியலில் சேர்த்த அமெரிக்காவின் நடவடிக்கைக்கு இலங்கை அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இன்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் இந்த முடிவு தொடர்பான கடுமையான கவலைகளைத் தெரிவித்துள்ளார்.

உரிய நடைமுறையைப் பின்பற்றாமல் அமெரிக்காவின் இத்தகைய ஒரு தலைப் பட்ச நடவடிக்கையானது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை நிவர்த்தி செய்வதில் இலங்கை எடுத்துள்ள முழுமையான அணுகுமுறைக்கு எதிரானது என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

நாட்டின் ஜனநாயக ஆட்சி மற்றும் நல்லிணக்கக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதில் அரசு மேற்கொண்டுள்ள உறுதியான முன்னேற்றத்தின் பின்னணியில் இந்த அறிவிப்பு வெளிவருவது துரதிர்ஷ்டவசமானது.

இந்தச் சவால்கள் இருந்த போதிலும், நல்லிணக்கம், பொருளாதார மீட்சி மற்றும் சமூக-பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை அடைவதற்கான அதன் தொடர்ச்சியான முயற்சிகளை இலங்கை அரசு தொடரும் என்று அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

வசந்த கரன்னாகொட மற்றும் அவரது குடும்பத்தினர் அமெரிக்காவுக்குள் நுழைய இன்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வசந்த கரன்னாகொட, கடற்படைத் தளபதியாக இருந்த காலத்தில், மனித உரிமைகள் கடுமையாக மீறப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டு அமெரிக்க 2

### ராஜபக்சக்களின் நெருங்கிய சகாவான

# வசந்த கரன்னாகொடவுக்கு தடை விதித்தது அமெரிக்கா

### அவரின் மனைவியின் பெயரும் கறுப்புப்பட்டியலில்



வடமேல் மாகாண ஆளுநரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான வசந்த கரன்னாகொடவின் பெயர் அமெரிக்காவின் கறுப்புப்பட்டி-யலில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில், அவர் மீதான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில், அவருக்கு விசா வழங்க மறுப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. 2

# ரணிலின் கரங்களைப் பலப்படுத்தினால் தீர்வை விரைவில் வென்றெடுக்க முடியும்

### தமிழர்களிடம் அமைச்சர் மனு வேண்டுகோள்



தமிழ் மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்தினால் தீர்வை விரைவில் வென்றெடுக்க முடியும். அதை விடுத்து இனவாத நோக்குடன் அரசு மீது விமர்சனங்களை முன்வைப்பதால் எதனையும் பெற முடியாது - என்று அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இது ராஜபக்சக்கள் தலைமையிலான ஆட்சி அல்ல; ரணில் தலைமையிலான ஆட்சி. இந்த ஆட்சியில் இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் ஒருபோதும் இடமில்லை. தமிழர்களை அரவணைத்தே இந்த அரசு பயணிக்கின்றது.

இந்நிலையில், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் சிலர் இனவாத நோக்குடன் எம்முடன் முட்டிமோதுகின்றனர். அரசை அவர்கள் இனவாதக் கண்ணோட்டத்துடன் நோக்குவதை உடன் நிறுத்த வேண்டும். நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் பிரச்சினைக்கும் தீர்வு காணும் நடவடிக்கையில் நாம் அனைவரும் இறங்க வேண்டும். -என்றார். (2)

# அபிவிருத்திக்குத் தமிழரின் பங்களிப்பு மிகவும் அவசியம்

### தீர்வு வழங்குவது அரசின் கடமை என்கிறார் பிரதமர்



நாட்டின் அபிவிருத்திக்கு உள்நாட்டுத் தமிழர்களினதும் புலம்பெயர் தமிழர்களினதும் பங்களிப்பு மிகவும் அவசியம் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள புலம்பெயர் தமிழர்கள் சிலர் முன்வந்துள்ளார்கள். அவர்களை நாம் வரவேற்கின்றோம். இந்தச் சிலர் என்ற எண்ணிக்கை பலராக - நூற்றுக் கணக்காக - ஆயிரக்கணக் காக- பல்லாயிரக்கணக்காக மாற வேண்டும் என்பதே எமது விருப்பம். உள்நாட்டில் வாழும் தமிழர்களும் நாட்டின் அபிவிருத்திக்குக் கூடுதலான பங்களிப்பை வழங்க வேண்டும். அப்போதுதான் வீழ்ந்த எமது நாட்டை விரைவில் மீளக்கட்டியெழுப்ப முடியும். நாட்டின் அபிவிருத்திக் குத் தமிழர்கள் பங்களிப்பு வழங்குவது போல் அவர்கள் எதிர்பார்க்கும் அரசியல் பிரச்சினைக்கும் விரைந்து தீர்வு வழங்குவது அரசின் கடமை. - என்றார். (02)

# நான்கு மாதங்களில் 144 யானைகள் சாவு

### 36 மனித உயிர்களும் காவு



கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் காட்டு யானைகளின் உயிரிழப்புகள் சற்று அதிகரித்துள்ளது என்று வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வருட ஆரம்பம் முதல் கடந்த 25 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 144 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

துப்பாக்கிப் பிரயோகம், மின்சாரம் பாய்ச்சுதல், வெடிமருந்து வைத்தல் போன்ற மனித செயற்பாடுகளால் மாத்திரம் 67 யானைகள் உயிரிழந்துள்ளன.

மனித செயற்பாடுகளால் காட்டு யானைகள் உயிரிழக்கும் வீதம் 2022 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களுடன் ஒப்பிடுகையில் 4 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 4 மாதங்களில் அதிகப்படியாக 34 காட்டு யானைகள் அனுராதபுரம் மாவட்டத்திலேயே உயிரிழந்துள்ளன.

பொலனறுவை மாவட்டத்தில் 29 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதுடன், கிழக்கு மாகாணத்தில் 19 யானைகள் உயிரிழந்துள்ளன.

இதேவேளை, இந்த வருடம் யானை - மனித மோதல் காரணமாக இதுவரையில் 36 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (02)

# மக்கள் ஆணையை இழந்த அரசு ஆட்சியில் இருப்பது வெட்கக்கேடு

### அநுர எம்.பி. விளாசல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரின் சகாக்களும் தேர்தலுக்கு அஞ்சவில்லையெனில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடனடியாக நடத்திக் காட்ட வேண்டும்.

- இவ்வாறு சவால் விடுத்தார் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி..

அவர் மேலும் கூறுகையில்,

பயப்படுகின்ற - துணிவில்லாத இந்த அரசால் நாடு எப்படி மீண்டெழப்போகின்றது?

வாக்குரிமை மக்களின் ஜனநாயக உரிமை. அதை எவராலும் தடுக்க முடியாது.

சாக்குப்போக்குக் காரணங்களைச் சொல்லி ஜனாதிபதியும் தேர்தல்கள் ஆணைக் குழுவினரும் சேர்ந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்துள்ளனர். இதற்கு எதிராக அனைவரும் ஓரணியில் நின்று போராட வேண்டும்.

மக்கள் ஆணையை இழந்த இந்த அரசு, ஆட்சியில் தொடர்வது வெட்கக்கேடு. எனவே, முதலில் உள்ளூராட்சி சபைத் தேர்தலும், அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும். - என்றார். (02)

# நீதிமன்ற உத்தரவை மீறி குருந்தூர்மலையில் கட்டுமானங்கள் இல்லை

## தொல்லியல் திணைக்களம் இன்று தெரிவிப்பு

(சண்முகம் தவசீலன்)

குருந்தூர்மலையில்நீதிமன்றஉத்தரவை மீறி விகாரைக் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படவில்லைஎன்றுதொல்லியல்திணைக்களம்இன்றுதெரிவித்தது. இதையடுத்து அங்கு நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் இது தொடர்பான கட்டளை வழங்கப்படும் என்று தெரிவித்து வழக்கை ஜூலை 4 அன்று ஒத்திவைத்தது முல்லைத்தீவு நீதிமன்றம்.

முல்லைத்தீவு மாவட்டம், தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் தொல்லியல் இடம் என்று அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்தவிகாரைக் கட்டுமானம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக குருந்தூர்

மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயதினர் சார்பில் மார்ச் 2 அன்று நீதிமன்றில் மன்றில் முறையீடு செய்யப்பட்டது. அந்த் வழக்கு விசாணைகள் இன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றது

இன்றைய விசாரணைகளுக்காக நீதிமன்றம் வந்திருந்த தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் சார்பில் நீதிமன்ற கட்டளைகளை மீறி கட்டுமானப்பணிகள் எவையும் நடக்கவில்லை அரச சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர். இதனை ஆலய தரப்பு சட்டத்தரணிகள் மறுத்தனர். நீதிமன்ற உத்தரவுக்குப் பின்னரும் அங்கு கட்டுமானங்கள் தொடர்ந்ததற்கான ஆதாரங்கள் உண்டு என்று வாதிட்டனர். பல மணி நேர வாத விவாதங்களின் பின்னர் நீதிவான் ரி.சரவணராஜா ஜூலை 4 அன்று குருந்தூர்மலைக்கு நேரடியாக சென்று நிலமைகளைப் பார்வையிட்ட பின்னர் கட்டளை வழங்கப்படும் என்று தெரிவித்தார். வழக்கு விசாரணைகளை அதே தினத்திற்குத் தவணையிட்டார்

இன்றைய விசாரணை தொடர்பில், ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சால்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகளில் ஒருவரான எஸ்.தனஞ்சயன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நீதிமன்றக் கட்டளைகளை மீறி தொல்பொருள் திணைக்களத்தினால் விகாரைக் கட்டுமானங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக நாங்கள் நகர்த்தல் பத்திரம் அனைத்து நீதிமன்றத்திற்கு ஏற்கனவே சமர்ப்பணம்

செய்திருந்தோம். அந்த சமர்ப்பணத்திலே மேம்படுத்தல் வேலைத்திட்டங்கள் தொடர்பான சான்றுகளை புகைப்படங்கள் ஊடாகவும் நாங்கள் வெளிக்காட்டியிருந்தோம்

அதுதொடர்பாகபதிலைவழங்குவதற்காக இன்றைய தினம் குறித்த வழக்கானது நியமிக்கப்பட்டிருந்தது தொல்பொருள் திணைக்களத்தின் சார்பில் அரச சட்டவாதிகள் நீதிமன்றிலே சமர்ப்பணங்களை செய்திருந்தனர் அதிலே குறிப்பிட்ட கட்டுமானம் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்திருந்தனர். இதனை எதிர்த்து நாங்கள் குறித்த கட்டுமானம் சட்டவிரோதமானதுதான் என்று வாதாடினோம்.

குறித்த இடத்துக்கு மீளச் சென்று பார்த்த பின்னர் சட்டவிரோதக் கட்டுமானங்கள் தொடர்பில் கட்டளை வழங்க வழக்கு ஜூலை 4 வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டது –என்றார்



# அரசுடன் எவரும் இணையமாட்டோம்; அடுத்த ஆட்சி சஜித் தலைமையிலே!

## இப்படிக் கூறுகின்றார் திஸ்ஸ அத்தநாயக்க

ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் எவரும் அரசுடன் இணையமாட்டார்கள் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அடுத்தஆட்சிசஜித்பிரேமதாஸதலைமையில்தான் மலரப் போகின்றது. அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றோம். இந்நிலையில், சஜித் பக்கத்திலிருந்து எவரும் அரசு பக்கம் செல்லமாட்டார்கள்.

ஐக்கிய மக்கள் சக்திக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் பொய்யான செய்திகளை அரச தரப்பினர் வெளியிடுகின்றனர். எனினும், எமது மக்கள் விழிப்பாக இருக்கின்றார்கள்.

எந்தத் தேர்தல் நடந்தாலும் மக்கள் ஆணை சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கே கிடைக்கும். அதனால்தான் இந்த அரசு தேர்தலை நடத்தாமல் காலத்தைக் கடத்துகின்றது. – என்றார். (02)

# குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை



கத்தியால் வெட்டிக் குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிரேவத்த பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற சம்பவத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அம்பலாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஹிரேவத்த கடற்கரைக்கு அருகில் மேலும் இருவருடன் மது அருந்திக் கொண்டிருந்த போது, அந்த இடத்துக்கு வந்த மற்றொரு நபர் அவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

பின்னர், குறித்த இடத்துக்கு வந்த நபர் மது அருந்திக்கொண்டிருந்த நபரைக் கத்தியால் வெட்டினார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (02)

# நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளில் அரசியல் தலையீடு அறவே கிடையாது!

## செஹான் சேமசிங்க ஆணித்தர கருத்து

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் செயற்பாடுகளில் எந்தவித அரசியல் தலையீடுகளும் கிடையாது. யாருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்பதை பிரதேச செயலக பிரிவு தீர்மானிக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின்போது உரையாற்றிய எதிர்க்கட்சிகளின் பிரதம கோலாசான் லக்ஷ்மன் கிரியெல்ல –

மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகளில் பொதுஜன பெரமுன அரசியல்வாதிகள் ஈடுபட்டு வருகின்றனர் எனக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.



இந்த விடயம் தொடர்பில் குறிப்பிடுகையில் நிதி இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் –

குறைந்த வருமானம் பெரும் குடும்பங்கள் மற்றும் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கவுள்ள நிவாரணம் தொடர்பில் முறையான தெரிவுகள் பரிசீலனை செய்யப்படுகிறது. மாவட்டச் செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரிசி பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகிறது.

இது இரகசியமாக முன்னெடுக்கும் வேலைத் திட்டமல்ல. அதற்கான குடும்பங்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளை மாவட்டச் செயலாளர்களும் பிரதேச செயலாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.

அவ்வாறான குடும்பங்களுக்கு அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்துள்ள வகையில் 10 கிலோ அரிசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மக்கள் கஷ்டப்படும் வேளைகளிலும் அவர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ள சந்தர்ப்பங்களிலும் மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் தேவையாக உள்ளது. அரசியல் இலாபத்தை முன்னிலைப்படுத்தி நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. –என்றார்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்கத் திணைக்களம், வெளிநாட்டு நடவடிக்கைகள் சட்டம் 2023 இன் பிரிவு 7031(உ) இன் படி இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தநடவடிக்கையின்விளைவாக,வசந்த கரன்னாகொட மற்றும் அவரது மனைவி ஸ்ரீமதி அசோக கரன்னாகொட ஆகியோர் அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தகுதியற்றவர்கள் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வசந்த கரன்னாகொட மனித உரிமை மீறல்களில்ஈடுபட்டார்என்றகுற்றச்சாட்டானது, அரசசார்பற்றநிறுவனங்கள்மற்றும்சுயாதீன விசாரணைகளால்ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இது தீவிரமானது மற்றும் நம்பகமானது என்றுஅமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (02)

## இரகசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடவையில் அரசுடன் இணைந்தால் ஐக்கிய மக்கள் சக்தியில் சஜித் பிரேமதாஸ மாத்திரமே மிஞ்சுவார் என்று இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட சிலர் தெரிவித் துள்ளனர். (02)

## வசந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட உள்ளிட்டோருக்கு எதிராகக் கொலைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. எனினும், அவர் குறித்த வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் வடமேல் மாகாண ஆளுநராகவும் நியமிக்கப்பட்டார்.

வசந்த கரன்னாகொடவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தீவிரமான மற்றும் நம்பகத்தன்மையுடன் இருக்கின்றன எனவும், ஆளுநரோ அல்லது அவரது மனைவியோ அமெரிக்காவுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்டனி பிளின்கன் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கும், இலங்கையில் குற்றவாளிகளுக்குப் பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கும் அமெரிக்கா தமது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)

# நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார் அலி சப்ரி

தன்னைக் குறித்து அமைச்சர் அலி சப்ரியால் தெரிவிக்கப்பட்ட நாடாளுமன்றத்துக்குப் பொருத்தமற்ற கருத்துக்கள் குறித்து சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் சபையில் இன்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் அலிசப்ரி சபையில் மன்னிப்புக் கோரினார்.

நாடாளுமன்றத்தில்இன்று சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து சாணக்கியன் உரையாற்றினார். தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் மனு நாணயக்கார என்னைப் பார்த்து புலி என்று கூறியிருந்தார். இவ்வாறான அரசியல் எம்மிடத்தில் காணப்படக்கூடாது. நாம் ஒருவரை ஒருவர் மதித்து நடக்க வேண்டும்.

அமைச்சரவை அமைச்சர்கள் இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களைஇந்த உயரிய சபையில் பயன்படுத்துவது வருத்தத்துக்கு உரியதாகும்.

இவ்விடயம் தொடர்பாகநாடாளுமன்றதத்துவங்கள், சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ் நான் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்ப வேண்டியுள்ளது.

மேலும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நான் இந்த நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பிலேயே பேசுகின்றேன். மட்டக்களப்பு மாவட்டமும் இலங்கையில் ஒரு மாவட்டம் என்று கூறினார்.



அத்துடன், நான் ஒரு பிரிவினைவாதி,மதவாதிஎன்று என்னைக் குறிப்பிட்டார்.

இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்கள் நாடாளுமன்றத்துக்குப் பொருத்தமானது இல்லை என்றே நான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

வெளிவிவகார அமைச்சர் என்னை இங்கு தேவையற்ற விதத்தில் விமர்சித்துள்ளார்.

நான் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவன்.

எனினும், வெளிவிவகார அமைச்சர் தேசியப்பட்டியல்உறுப்பினராவார்.

எனது மக்கள் சார்பாக அவர்களது பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் எழுப்புவதற்கான கடப்பாடும் பொறுப்பும் எனக்குக் காணப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட நபரைத் திருப்திப்படுத்து-வதற்காகஅவர்நியமிக்கப்பட்டு இருக் கலாம்.

நான் எனது சார்பாக பொறுப்பான அமைச்சிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் நான் இந்த நாடாளுமன்றத்தில் அந்த விடயங்களைச் சுட்டிக்காட்ட முனைந்தபோது அந்தக் கேள்வியைக் கேட்பதற்கு எனக்கு நேர அனுமதி மறுக்கப்பட்டது. அன்றைய தினம் அந்த விடயத்துக்கு உரிய அமைச் சரும் இங்கு சமூகமளித்திருக்கவில்லை. எனவே, அதற்காக அவர்கள் பதில் கூறவில்லை.

எனினும், நான் அந்த வினாவை எழுப்பியபோதும் எனக்கான நேரத்தைக் கோரிய போதும் அமைச்சர் மனு நாணயக்கார என்னைப் 'புலி' என்றும் ''இனவாதி' என்றும் குறிப்பிட்டார். அமைச்சர்மனு நாணயக்காரவே என்னைப் புலி என்றும் இனவாதி என்றும் அழைத்தார்.

மனு நாணயக்கார இவ்வாறு குறிப்பட்டதை நினைத்து நான்மிகவும்அதிர்ச்சியடைந்தேன். பொறுப்பான அமைச்சர்கள் என்ற விதத்தில் இவ்வாறு நடந்துகொள்வது வேதனைக்குரிய விடயமாகும் - என்றார். (02)

# ஆயுர்வேத வைத்தியர் கழுத்தறுத்துக் கொலை

களுத்துறை வடக்கு, கெலிடோ வீதியில் வீடொன்றின் பின்புறத்திலிருந்து கழுத்து வெட்டப்பட்ட நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது

இன்று அதிகாலை வீட்டின் பின்புறத்தில் பெண்ணின் சடலத்தைப் பார்த்த அவரது மகள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

ஆயுர்வேத வைத்தியரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரைக் கொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் கத்தியும் குறித்த இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர். (02)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பேர்ள் கப்பல் விவகாரத்தில் இலஞ்சம் பெற்றவருக்கும் அரசுக்குமிடையில் தொடர்புள்ளதாக சந்தேகிக்கிறோம்!

## ரஞ்சித் மத்தும பண்டார கூறுகிறார்



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் நபருக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் தொடர்புகள் காணப்படுகின்றன என நாம் சந்தேகிக்கின்றோம்.

எனவே நாடாளுமன்றத்திலுள்ள சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து இந்த விவகாரத்தில் உண்மைகளை வெளிப்படுத்துமாறு அழுத்தம் பிரயோகிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அத்தோடு பொலிஸ் திணைக்களம் அதன் சுயாதீனத் தன்மையை இழந்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அரசியல் தலையீடுகளுக்கமையவே தற்போது 7 சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பேர்ள் கப்பல் விவகாரத்தில் இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் சாமர குணசேகர யார் என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். குறித்த நபர் இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படுவதற்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு சட்டமூலம் தொடர்பில் பெரிதாகப் பேசிக் கொண்டிருப்பவர்களின் அரசாங்கத்திலேயே இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நீர் மற்றும் மின் கட்டணங்களை அதிகரிப்பது தீர்வாகாது. ஊழல், மோசடியாளர்களை இனங்கண்டு அவர்களால் கொள்ளையிடப்பட்டு தேசிய சொத்துக்களை பறிமுதல் செய்தால் நாட்டின் பெருமளவான பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும்.

சாமர குணசேகர என்ற நபருக்கு அரசாங்கத்துடன் ஏதேனும் தொடர்புகள் காணப்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. காரணம் அரசாங்கத்துடன் தொடர்பற்ற ஒருவரால் இவ்வாறு செயற்பட்டிருக்க முடியாது. எனவே இது தொடர்பில் உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு கோருகின்றோம்.

இதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்பதற்கு நாடாளுமன்றத்திலுள்ள சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கத் தீர்மானித்துள்ளோம். கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். எனினும் இதற்கு பொலிஸ் திணைக்களத்திடம் அனுமதி பெறப்படவில்லை. சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் சுயாதீனத்தன்மை நீக்கப்பட்டு அரசியல் தலையீடுகள் வலுப்பெற்றுள்ளன. நீதிமன்ற உத்தரவுகளைக் கூட பொலிஸார் நடைமுறைப்படுத்தாத நிலைமையே தற்போது காணப்படுகிறது. சட்டம் மாற்றமடையும் போது அமைதியும் சீர்குலையும் என்பதை சிந்திக்க வேண்டும். –என்றார்.

# சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் அரசின் கரிசனை திருப்தியில்லை

## சந்திரிகா சாடல்



சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மிகவும் மந்த கதியிலேயே முன்னெடுக்கப்படுகின்றன.

அரசாங்கமும் குறிப்பாக கல்வி அமைச்சும் இந்த விடயத்தில் தற்போதுள்ளதை விட பொறுப்புடன் செயற்பட வேண்டுமென கேட்டுக்கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

'விழிகளுக்கு கண்ணீரால் விடைகொடுத்து உதிர்ந்து போனது வெண் மலர்' என்ற கதை நூலின் அறிமுக நிகழ்வு கடந்த புதன்கிழமை கொழும்பில் அமைந்துள்ள தேசிய பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, விசேட அதிதியாக முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

நாட்டில் அண்மைக் காலமாக சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. நான் ஆட்சியைப் பொறுப்பேற்ற காலத்தில் சிறுவர் மற்றும் மகளிருக்கு எதிரான வன்முறைகள் அதிகமாகவுள்ள நாடுகள் பட்டியலில் இலங்கை முதல் 10 இடங்களுக்குள் காணப்பட்டது.

இந்நிலையில் எனது ஆட்சி காலத்தில் கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை மாணவிகள் பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சாரதியொருவரால் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தையடுத்து முதன் முறையாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தேன். அதனைத் தொடர்ந்து சிறுவர் துன்புறுத்தல் தொடர்பான சர்வதேச மட்டத்திலான தரப்படுத்தலில் இலங்கை முன்னிலை வகிக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் இந்த நிலைமை தற்போது மாற்றமடைந்து வருகிறது. சிறுவர்கள் மீதான வன்முறைகள், துன்புறுத்தல்களுக்கு எதிராக துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்த வேண்டும். குறிப்பாக கல்வி அமைச்சு இவற்றைத் தடுப்பதற்கு முன்னின்று செயற்பட வேண்டும்.

எனவே, சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு விசேட குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அரசியல் நியமனங்கள் அன்றி துறைசார் விசேட நிபுணர்கள் அவற்றுக்கு நியமிக்கப்பட வேண்டும். ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகளுக்கு மாத்திரம் அதிகாரங்களை வழங்கிக் கொண்டிருக்காமல் இவரானவர்களுக்கு அதிகாரங்களை வழங்கி சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டும். – என்றார்.

# சேமலாப நிதியம், நம்பிக்கை நிதியம் என்பவை இரத்து செய்யப்படலாமாம்

## நாலக கொடஹேவா எச்சரிக்கிறார்



தேசிய கடன்களை மறுசீரமைத்தால் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய–வற்றை இரத்து செய்ய நேரிடும். இதனால் நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள். தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் –

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டதால் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு விட்டோம் என ஜனாதிபதி குறிப்பிடுகின்றமை நாட்டு மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயற்பாடாகும்.

நாணய நிதியத்தின் ஒரு சில சாதக காரணிகளை மாத்திரம் பெருமையாகக் குறிப்பிடும் தரப்பினர் கடுமையான நிபந்தனைகளை செயற்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் குறிப்பிடாமல் இருக்கின்றமை பிரதான குறைபாடாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தவறான பொருளாதாரக் கொள்கையால் 2019 ஆம் ஆண்டு பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தது. இதனை ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

ஆனால் தங்களின் அரசியல் நோக்கத்துக்காக ஜனாதிபதிக்கு சாதகமாக செயற்படுகிறார்கள். 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சர்வ தேச பிணைமுறியில் இருந்து அதிக கடன் பெற்றுக்கொள்ளப்பட்டது.

கடன் மறுசீரமைப்புக்கு பிரதான நிலை கடன் வழங்குநர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் எனவும், 14 சதவீத கடன்களை இரத்து செய்ய இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது.

கடன் மறுசீரமைப்புக்கு இதுவரை உறுதியான இணக்கப்பாடு எட்டப்படவில்லை. சர்வதேச கடன்களை மறுசீரமைக்க வேண்டுமாயின் தேசிய கடன்களையும் மறுசீரமைக்க வேண்டும் என பிரதான நிலை கடன் வழங்குநர்கள் அரசாங்கத்திடம் குறிப்பிட்டுள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பின் இரண்டாவது தவணை நிதியை பெற்றுக்கொள்ள தேசிய கடன்களை மறுசீரமைக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும். இதனால் சாதாரண வைப்பாளர்கள், முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவை கூட இரத்து செய்யப்படும். ஆகவே நாட்டு மக்களுக்கு உண்மையை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும். – என்றார்.

# நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்தினால் அரசியல்வாதிகள் வீதிக்கு இறங்கவே முடியாதாம்

## எச்சரிக்கிறார் சந்திம வீரக்கொடி



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்தினால் அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும். அதனால் சாதாரண வங்கி வைப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மோசமாகப் பாதிக்கப்படுவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் எடுத்த தவறான பொருளாதார முகாமைத்துவக் கொள்கையால் நாடு குறுகிய காலத்துக்குள் வங்குரோத்து நிலை அடைந்தது.

பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்தை நாடுங்கள் என அப்போதைய ஜனாதிபதி, நிதியமைச்சரிடம் பலமுறை வலியுறுத்தினோம்.

சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டிய தேவையில்லை. பொருளாதார நெருக்கடிக்கு சிறந்த முறையில் தீர்வு காண்போம் என அரசாங்கம் தான்தோன்றித்தனமாகப் பதிலளித்தது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தது, இறுதியில் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு குறுகிய காலத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்தை தவிர்த்து மாற்றுத்திட்டம் ஏதும் இல்லாத காரணத்தால் நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. சர்வதேச கடன் மறுசீரமைக்கப்படும், தேசிய கடன் மறுசீரமைக்கப்பட மாட்டாது என அரசாங்கம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் தவணை கிடைத்ததன் பின்னர் தேசிய கடன் மறுசீரமைக்கப்படும் என அரசாங்கம் குறிப்பிடுகிறது.

தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும். அதனால் சாதாரண வங்கி வைப்பாளர்கள், முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவார்கள். சமூக கட்டமைப்பில் பாரிய நெருக்கடி ஏற்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்தினால் அரசியல்வாதிகள் எவரும் மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

ஆகவே ஜனாதிபதி உள்பட்ட அரசியல்வாதிகள் அனைவரும் சுய புத்தியுடன் சிந்தித்து செயற்பட வேண்டும். வழங்கப்பட்ட அடிப்படை ஆலோசனைகள் இலங்கையில் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதை சர்வதேச நாணய நிதியம் கண்காணிக்க வேண்டும். – என்றார்.

# 2 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

நாட்டின் சில பகுதிகளுக்கு தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தால் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கொழும்பு மாவட்டத்தின் பாதுக்க பிரதேச செயலாளர் பிரிவு, இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி மற்றும் எஹலியகொட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நாட்டின் பல பகுதிகளில் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் பலத்த மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (02)

# தமிழர்களின் பூர்வீக காணிகளை சீனாவுக்கு வழங்க அரசு முயற்சி

## உண்மையை விரைவில் பகிரங்கப்படுத்துவேன் என்கிறார் சிறிதரன்



பொருளாதார பாதிப்புக்கு மத்தியிலும் அரசாங்கம் இனவாதத்தைக் கருப்பொருளாகக் கொண்டு செயற்படுகிறது. நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை, அரசமைப்பு பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பரிந்துரைகளை முன்வைக்க சர்வதேச நாணய நிதியம் ஏன் அவதானம் செலுத்தவில்லை.

தமிழர்களின் காணிகளை சீனாவுக்கு வழங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை எதிர்வரும் நாள்களில் பகிரங்கப்படுத்துவேன் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்பில் சபைக்கு இரண்டு பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் சாதக மற்றும் பாதக விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெற்றிருந்தால் முரண்பாடற்ற ஒருமித்த தீர்மானத்தை எடுத்திருக்க முடியும்.

ஆனால் விவாதத்தின் போது தான் நாணய நிதியத்துடனான நிபந்தனைகளின் பொழிப்புகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை ஏமாற்று செயற்பாடாகும்.

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வதேச சமூகத்தின் அழுத்தம் போதுமானதாக இல்லை. நாட்டில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மீதான செயற்பாடுகள் நாளாந்தம் தீவிரமடைந்த பின்னணியில் சர்வதேச நிதி நிறுவனங்கள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு, பொருளாதார மீட்சியடைந்த பின்னர் தமிழ் இனத்துக்கு எதிரான செயற்பாடுகளை மீண்டும் முன்னெடுக்கும் முனைப்புக்களே காணப்படுகின்றன.

தமிழ் சமூகத்துக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட யுத்தத்தால் நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டது என்பதை மறுக்க முடியாது.

நாட்டின் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை, அரசமைப்பு பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வதேச நாணய நிதியம் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்க வில்லை. தமிழர்களுக்கு எதிராக மீண்டும் அழிப்பை தொடர்வதற்காகவா நாணய நிதியம் நிதி வழங்குகியுள்ளது என்பதை உயர்ந்த பட்ச சபை ஊடாகக் கேட்கிறோம்.

அரசியல் பிரச்சினை காரணமாகவே பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தது, பொருளாதாரப் பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசியல் பிரச்சினையை மூடி மறைக்க முடியாது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பாதுகாப்பு தரப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இனவாதம் நாட்டின் பிரதான கருபொருளாக உள்ளது. இனவாத சிந்தனை ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் உள்ளங்களில் காணப்படுகின்றன.

நாட்டில் இனவாத பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு ஊடாக தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்படும்.

தமிழர்களின் பிரதேசங்களை சீனாவுக்கு வழங்க அரசாங்கம் அவதானம் செலுத்துகிறது. இதற்கு சர்வதேச நாணய நிதியம் ஒத்துழைப்பு வழங்குகிறதா என்று நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையிடம் கேட்கிறேன். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதி மறுக்கப்பட்ட நல்லிணக்கம் சாத்தியமல்ல

வடமேல் மாகாண ஆளுநரும் கடற்படையின் முன்னாள் தளபதியும் ராஜபக்சக்களின் நெருங்கிய சகாவுமான அட்மிரல் வசந்த கரன்னகொடவை அமெரிக்கா கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது. பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களையே அமெரிக்கா இவ்வாறு தனது கறுப்புபப்பட்டியலில் சேர்த்து வருகின்றது. இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டோர் அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்படும். அதன்படி கரன்னகொடவும் அவரது மனைவியும்கூட இனிமேல் அமெரிக்காவிற்குள் நுழைய முடியாது.

இறுதிப் போரில் அட்மிரல் கரன்னகொடவின் பங்களிப்பு காரணமாக, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவர் பொறுப்புக்கூற வேண்டியவர் என்கிற வகையில் இந்த நடவடிக்கை அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு வெளியான கையோடு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரிடம் தனது கடும் கண்டனத்தை வெளியிட்டிருக்கிறார் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி.

தனது கண்டனத்தைப் பதிவு செய்யும்போது அவர் தெரிவித்திருக்கக்கூடிய ஒரு கருத்து மிக முக்கியமானதும் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாததுமாகும்.

“உரிய நடைமுறைகளைப் பின்பற்றாத அமெரிக்காவின் இந்த ஒருதலைப்பட்ச நடவடிக்கையானது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் எடுத்துவரும் முழுமையான அணுகுமு–றைக்கு எதிரானது” என்று இலங்கை அரசின் சார்பில் அயலுறவுத்துறை அமைச்சர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் இறுதிப் போரில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு –மனித உரிமை மீறல்களுக்கு – மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு – போர்க் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் தண்டிக்கப்படுவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக் வழி வகை செய்யப் படவேண்டும் என்பதே தமிழர்களின் ஒரே கோரிக்கை. கடந்த 13 ஆண்டுகளாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் இலங்கைக்குள்ளேயும் வெளியேயும் தமிழர்கள் இதற்காகவே போராடி வருகின்றார்கள்.

போரில் இடம்பெற்ற அத்தனை குற்றங்களுக்கும் சாட்சிகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் தமிழர்கள். கொழும்பிலேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்து உயர் பதவிகளையும் வகிக்கும் அயலுறவுத்துறை அமைச்சரைப் போன்றவர்கள் அந்தத் துன்பத்தைப் பற்றி துயரத்தைப் பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதனை அனுபவித்தவர்களைச் சந்தித்து அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டிருக்கவும் வாய்ப்பில்லை என்கிறபோது, அவருக்கு பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்கள் தெரியாது இருப்பதில் வியப்பில்லை. ஆனால், தமிழர்கள் அதனை மறக்கப்போவதில்லை. நீதி கிடைக்கும்வரை போராடிக்கொண்டே இருப்பார்கள்.

இவ்வாறு இறுதிப் போரில் நிகழ்த்தப்பட்ட குற்றங்களுக்குத் தமிழர்கள் நீதியைக் கேட்டு போராடிக் கொண்டிருக்கையில், அந்த நீதியை மறுக்கும் பாதையில்தான் இன்றைய ஆட்சியின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க முயற்சிகள் நகர்கின்றன என்பதைத்தான் அயலுறவுத்துறை அமைச்சரின் கூற்று எடுத்துக்கூறுகின்றது. போர்க் குற்றங்களில் தொடர்புபட்டவர் என்ற அடிப்படையிலேயே அட்மிரல் கரன்னகொடவின் பெயரை அமெரிக்கா கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது. அப்படியிருக்கையில் அந்த நடவடிக்கை ஆட்சியாளர்களின் நல்லிணக்க நடவடிக்கைக்கு எதிரானது என்று அவர் கூறுவதானது, இறுதிப் போர் தொடர்பான குற்றங்களில் தமிழர்கள் கேட்டு நிற்கும் நீதியை ஆட்சியாளர்கள் மறுப்பதையே தெளிவுபடுத்துகின்றது.

ஒருவேளை அப்படி நீதியை மறுப்பதுதான் ஆட்சியாளர்களின் நல்லிணக்கமாக இருக்குமானால் அதனைத் தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதையும் ஆட்சியாளர்கள் நினைப்பதைப்போன்று மறுக்கப்பட்ட நீதியைக் கொண்டு ஒரு நல்லிணக்கம் ஒருபோதும் ஏற்படாது என்பதையும் கவனத்தில்கொள்ளவேண்டும். இங்கே நீதி நிலைநாட்டப்பட்டால் மட்டுமே தமிழர்களிடமிருந்து நல்லிணக்கத்திற்கான ஒப்புதலைப் பெறமுடியும். ஓர் இனப்படுகொலையை, திட்டமிட்ட போர்க் குற்றங்களை நிகழ்த்திவிட்டு அந்தக் குற்றவாளிகளைப் பாதுகாத்தபடி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று அயலுறவுத்துறை அமைச்சரும் ஆட்சியாளர்களும் நினைத்தால் அது வெறும் கானல் நீரே. தமிழர்கள் ஒருபோதும் அதற்கு ஒத்துவரமாட்டார்கள்.

# ஈ.பி.எப்., ஈ.ரி.எப். நிதியத்துக்குப் பாதிப்பு மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது!

## நிரோஷன் பெரேரா சுட்டிக்காட்டு



சர்வதேச நாணய நிதியத்தால் பெற்றுக்கொள்ளப்படும் கடன் உதவியைக் கொண்டு நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் என்ன? அது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்த விடயங்களையும் தெரிவிக்கவில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் நிரோன் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டிடை அமுல்படுத்துவதற்கான தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

சர்வதேச நாணய நிதியத்தில் 8 நாடுகளைத் தவிர ஏனைய நாடுகள் அதன் உறுப்பு நாடுகளாகும். இலங்கையும் நாணய நிதியத்தின் உறுப்பு நாடாகும். இலங்கை இதற்கு முன்னர் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியை பெற்றுக்கொள்ள சென்றிருக்கிறது.

ஆனால், 17 ஆவது தடவையாக சென்றிருப்பதில் வித்தியாசம் இருக்கிறது. நாடு வாங்குரோத்து அடைந்த நிலையிலேயே சர்வதேச நாணய நிதியத்துக்கு இம்முறை சென்றிருக்கிறோம். அப்படியானால் வெளிநாடுகளின் கடன் மறுசீரமைப்பு எவ்வாறு மேற்கொள்ளப்போகிறோம் என்ற வேலைத்திட்டம் இருக்கவேண்டும்.

அத்துடன் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளும்போது தேசிய கடன் மறுசீரமைப்பு செய்யப்போவதில்லை என அரசாங்கம் ஆரம்பத்தில் தெரிவித்து வந்தது. ஆனால் தற்போது தேசிய கடன் மறுசீரமைப்பு செய்யப்போவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். தேசிய கடன் மறுசீரமைப்பு செய்யும்போது ஈ.பி.எப்., ஈ.ரி.எப். நிதியத்துக்கு பாதிப்பு ஏற்படும் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று பங்குச் சந்தைக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாகவும் அரசாங்கம் மதிப்பிட்டுக்கொள்ள வேண்டும். ஆனால் பங்குச்சந்தை இதற்கு இணக்கம் இல்லை என்றால் அதனை மூடிவிடுவோம் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இவ்வாறு இலகுவாக தெரிவிக்காமல் அதற்கான முறையான வேலைத்திட்டத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும் சந்தேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் வெளிப்படைத்தன்மை தொடர்பாக பாரிய பிரச்சினை இருந்து வருகிறது. ஒப்பந்தத்தை செயற்படுத்தும்போது வெளிப்படைத் தன்மையுடனும் கட்சி அரசியலுக்கு அப்பால் சென்று இதனை செயற்படுத்த வேண்டும்.

அதன் மூலமே நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக்கிக் கொள்ள முடியும். ஆனால் சர்வதேச நாணய நிதியத்தைக்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திடம் முறையான வேலைத்திட்டம் இல்லை. அதனால்தான் அதுதொடர்பில் எந்த விடயத்தையும் அரசாங்கம் இதுவரை முன்வைக்கவில்லை. – என்றார்.

# விமல் வீரவன்ஸவின் கருத்துக்கு அமெரிக்க தூதுவர் ஜூலி மறுப்பு



இலங்கை மற்றும் அமெரிக்காவுக் கிடையிலான 75 ஆண்டுகால ஜனநாயக மற்றும் இறைய–ான்மை உறுதிப்பாடுகள் அவ்வாறே தொடர்ந்தும் பகிரப்படும் எனத் தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங், நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ள கருத்துக்களை மறுத்துள்ளார்.

'ஒன்பது – மறைக்கப்பட்ட கதை' என்ற நூல் வெளியீட்டு விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ 'அர கலய' ஆர்ப்பாட்டத்தின் பின்னணியுடன் அமெரிக்கத் தூதுவரை தொடர்புபடுத்தி அவரை விமர்சித்திருந்தார்.

இந்நிலையில் இதற்கு பதிலளிக்கும் வகையில் செய்துள்ள ருவிட்டர் பதிவிலேயே தூதுவர் தனது மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

அவரது ருவிட்டர் பதிவில், 'புனைகதை' என்று முத்திரைகுத்தப்படவேண்டிய புத்தகத்தில் ஓர் எம்.பி. ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைசுமத்தி அப்பட்டமான பொய்களைப் பரப்பியிருக்கின்றார்.

75 ஆண்டுகளாக அமெரிக்காவும் இலங்கையும் ஜனநாயகம், இறையாண்மை மற்றும் செழிப்புக்கான உறுதிப்பாட்டை பகிர்ந்து கொண்டிருக்கின்றன. அதேபோன்று தொடர்ந்தும் கூட்டாண்மையுடன் எதிர்காலத்தை நாம் உருவாக்குவோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# விமலின் கருத்து அடிப்படையற்றது!

## மறுக்கிறது பாதுகாப்பு அமைச்சு



நாட்டில் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது ஜனாதிபதி மாளிக்கைக்குள் படைத்தளபதிகள் மற்றும் ஜனாதிபதி உள்ளிட்டோர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படவிருந்ததாகவும், அந்த சந்தர்ப்பத்தில் முன்னாள் இராணுவத்தளபதி இந்தியாவுக்கு சென்றிருந்தமை சந்தேகத்தை தோற்றுவிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ஸ தெரிவித்துள்ள கருத் தைப் பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் –

கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் பக்க நிகழ்வாக தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டம் கடந்த ஆண்டு ஜூலை 7 ஆம் திகதி இந்தியாவில் இடம்பெற்றது.

நாட்டின் அப்போதைய ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை மற்றும் அனுமதியின் கீழ் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாதுகாப்பு பதவி நிலை தலைமை அதிகாரி, முன்னாள் விமானப்படைத் தளபதி சவேந்திர சில்வா குறித்த மாநாட்டில் பங்குபற்றியிருந்தார்.

இந்நிலையில் நூல் வெளியீட்டுவிழாவொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, '2022 மே 9ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தவர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் ஜனாதிபதி மற்றும் படைத்தளபதிகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள திட்டமிட்டதாகவும், அந்த சந்தர்ப்பத்தில் சவேந்திர சில்வா இந்தியா சென்றிருந்தமை சந்தேகத்தை ஏற்படுத்தியது.' என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ள கருத்து அடிப்படையற்றதாகும். பாதுகாப்பு பதவி நிலை தலைமை அதிகாரி, முன்னாள் விமானப்படைத் தளபதியுமான சவேந்திர சில்வா கொழும்பு பாதுகாப்பு மாநாட்டில் பங்குபற்றுவதற்காக கடந்த ஆண்டு ஜூலை இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தைமேற்கொண்டிருந்தது அப்போதைய ஜனாதிபதியின் ஆலோசனைக்கமையவே என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். –என்றுள்ளது.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமும் ஐ.எம்.எவ்வின் நிபந்தனையா?

## நளின் சபையில் கேள்வி



அரசாங்கம் தனது தேவைக்காக பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் போன்ற விதிகளை கொண்டு வருவதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (புதன் கிழமை) உரையாற்றிய அவர், குறித்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டமும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனை என்றே தான் கருதுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்காமல் நாட்டை திவாலாக்கியது என்றும் ஊழல் வாதிகளால் சூழப்பட்டுள்ள அரசாங்கமே தற்போது காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டை அதல பாதாளத்துக்குக் கொண்டு சென்றவர்கள் ராஜபக்ஷர்களே என்றும் நளின் பண்டார குற்றம் சாட்டியுள்ளார்.

தற்போதைய புதிய அரசாங்கம் தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்தும் சட்டங்களை உருவாக்குவதற்குப் பதிலாக இவ்வாறு செயற்படுகின்றமை தொடர்பாக அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

## காலணிகள் மற்றும் புத்தகப் பைகள் மாணவர்களுக்காக விலை குறைப்பு!

டொலரின் மதிப்பு குறைந்துள்ளதால், பாடசாலை மாணவர்களின் காலணிகள், புத்தகப் பைகளின் விலை குறைக்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் 23 ஆம் திகதிக்கு பின்னர் இவற்றின் விலையை 500 முதல் 1000 ரூபா வரை குறைப்பதற்கு உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

புத்தகப் பை, காலணிகள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களின் விலைகள் குறைந்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.